
# செங்குந்த மித்திரன்

மலர்:21 இதழ்: 3 | மார்ச் – 2021 | Date of Publication 25th day of Every month | தனிப்பிரதி விலை: ₹ 15/–



## செங்குந்த வள்ளல் - நல்லாசிரியர்
## மூத்த தடகள வீரர்
## திரு.T.தேவராஜன் செங்குந்தர்

வாழ்க வாழ்க
செங்குந்தர்!

வெல்க வெல்க
செங்குந்தம்!!



சேலம் கந்தகிரி வேலாயுதசாமி

# செங்குந்தர் உறுதிமொழி

நாம் செங்குந்த குலக்கடவுள் அருள்மிகு முருகப்பெருமான் ஆணையாக, மனசாட்சியுடன் கீழ்க்கண்டவாறு உறுதி பூணுகிறோம்.

1. நாம் இந்தியக் குடிமக்களாய் இருப்பதை, பெருமையாகக் கருதுகிறோம். நமது நாட்டின் அரசியல் அமைப்புச் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, நாட்டின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் பாடுபடுவோம்.
2. நாம், செங்குந்தர் என்ற உணர்வுடன் ஒன்றுபட்டு, நமது சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு சமூக, பொருளாதார, கல்வி, தொழில், கலாச்சார முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம். சமூக நலம் காப்போம்.
3. நாம் மற்ற இனத்தவரிடம், மனித நேயம் கொண்டு, நட்புடனும், அன்புடனும் பழகுவோம்.
4. நாம், நமது உரிமைகளைப் பாதுகாக்க எப்பொழுதும் விழிப்புடன் செயல்படுவோம்.
5. நாம் நமது சங்கம் நிறுவிய சான்றோர்களை நினைவில் கொண்டு, சங்கத்தை நாளும் வளர்த்திடுவோம்.

# தலைவர் மடல்

பிறப்பின் நொடிகள் என்றும் அழகானது
அதை மீண்டும் காலத்தின் நகர்வால் அடையும்போது
வாழ்ந்த வாழ்க்கை மிகவும் அழகானது என்று
வாழ்க்கையை அழகாகக் கடந்து சென்றுகொண்டிருக்கும்
செங்குந்த சொந்தங்களுக்கு வணக்கம்.

சித்திரை முதல் நாள் தொடங்கும் பிலவ தமிழ் வருடப் பிறப்பு அனைவருக்கும் துன்பங்கள் விலகி, இன்பங்கள் பெருகி இறைவன் எப்போதும் துணையாக இருந்து மகிழ்ச்சியை மேலும் அதிகரிக்கவும், இந்தப் புத்தாண்டு இனிமையாக அமையவும் வேண்டுகிறோம்.

வள்ளல் தி.நா.சபாபதி செங்குந்தர், பத்மஸ்ரீ M.P.நாச்சிமுத்து செங்குந்தர், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர்களின் பிறந்த நாள் விழாவினையும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் உதயமான தினத்தையும் அனைத்து மாவட்ட மற்றும் கிளைச் சங்கங்களும் சமூக இடைவெளியைப் பின்பற்றி கொண்டாடி மரியாதை செலுத்த வேண்டுகிறோம்.

வெற்றிகள் பதியட்டும்
தோல்விகள் தேயட்டும்
புன்னகை பூக்கட்டும்
முயற்சிகள் முளைக்கட்டும்.



அனைவருக்கும்
இனிய தமிழ்ப் புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள்.

அன்புடன்

KPK செல்வராஜ்




# சென்னை அருள்மிகு
# காளிகாம்பாள்

**'யாதுமாகி நின்றாய் காளி' என்று மகாகவி பாரதியார் போற்றிப் பாடிய அம்பாள் சென்னை காளிகாம்பாள்.**

காளிகாம்பாள் கோவிலில் ஜகன்மாதா எண்ணிய எண்ணங்களை நிறைவேற்றுவதில் காமாட்சியம்மன்... தீயவர்களை அழிப்பதில் காளிகாம்பாள்... எனும் திருநாமத்துடன் அருள்புரிகிறார். புவனேஸ்வரியாக, ராஜராஜேஸ்வரியாக, ராஜமாதங்கியாக, காமாட்சியாக, பத்ரகாளியாகப் பல்வேறு வடிவங்களிலும் பக்தர்களுக்கு அருளாசி தருகிறாள்.

சென்னை, தம்பு செட்டி தெருவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. கோயில் மூலவர் கமடேஸ்வர், தாயார் ஸ்ரீ காளிகாம்பாள். இக்கோயில் தலவிருட்சமாக மா மரமாகவும், கடல் நீரே தீர்த்தமாகவும் உள்ளது.

### தல வரலாறு

கற்பனைக்கும் எட்டாத அருள்தரும் சிவசக்தித்தலம் காளிகாம்பாள் கோவில் கி.பி 1639-ம் ஆண்டுக்கு முன்பே அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. காளிகாம்பாள் முதலில் தோன்றி அருள்பாலித்துக் கொண்டிருந்த இடம், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை வளாகம். செயின்ட்



சென்னை அருள்மிகு காளிகாம்பாள்

ஜார்ஜ் கோட்டை வெள்ளையர்களின் ஆட்சிக்குட்பட்டு பாதுகாக்கப்பட்ட பகுதியாக மாறியதால் பக்தர்கள் வந்து வழிபாடுகள் செய்வதில், சிரமங்கள் ஏற்பட்டது. இதனையடுத்து தற்போதுள்ள தம்புச்செட்டித்தெருவில் கோவில் கட்டப்பட்டது.

நெய்தல் நில மக்கள் நினைத்த காரியத்தை நிறைவேற்றி வைப்பதால், 'நெய்தல் நில காமாட்சி' என்றும் அழைக்கப்படுகிறார். இக்காளியம்மனை மீனவர்களும் விஸ்வகர்மாக்களும் சிவப்புக் குங்குமம் பூசி வழிபடுவதால்



'சென்னம்மன்' என பெயர் பெற்றார். சென்னம்மன், சென்னியம்மன் என தெலுங்கர்களும், கன்னடர்களும் இப்போதும் அழைக்கின்றனர்.

**காளிகாம்பாள் - கமடேஸ்வரர்**

காளிகாம்பாள் என்றால் காளி. காளி என்றால் உக்கிரத்துடன் இருப்பவள். ஆனால் இங்கே காளி சாந்தசொரூபினி. அமைதியே உருவான திருமுகத்துடன், மந்தகாசப் புன்னகை தவழ, நம்மையெல்லாம் ஒரு குழந்தையைப் போல் ஏற்றுக் கொண்டு, நமக்கு அருளும் பொருளும் அள்ளித் தருகிறாள்.

அம்மையை வணங்கினால் இன்னும் வளமாக்குவாள் வாழ்க்கையை. லேசாக்குவாள் உங்கள் மனதை!.

காளிகாம்பாள் கோவிலின் சுவாமி பெயர் ஸ்ரீகமடேஸ்வரர். இவர் சந்நிதிக்கு வந்து, கமடேஸ்வரரை மனதாரப் பிரார்த்தனை செய்தால் கர்வம் அழித்து, நம்முடைய தடைகளையெல்லாம் தகர்த்து அருள்வார்.

கடற்கரைக் கோவிலில் காளி உருவம் உக்கிரமாக இருந்ததாகவும், தம்புசெட்டித் தெருவிற்கு மாறியபோது காளியின் உருவம் சாந்த சொரூபியாக மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கருணை தெய்வமான காளிகாம்பாள் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளம்... ஏராளம்... அவற்றை எவராலும் பட்டியலிட முடியாது.

பொதுவாக தமருகம், சூலம், கட்கம், கபாலம், கேடகம் முதலியன கொண்டு கோப ரூபத்துடன் இருப்பவளே காளி என்று சொல்வார்கள். ஆனால், நம் அன்னை ஸ்ரீகாளிகாம்பாளின் ரூபத்தினை சற்றே உன்னிப்பாகப் பார்த்தால், அன்னை எழில் கொஞ்சும் திருமேனியுடன் இருப்பதை காணலாம்.

ஆணவத்தை அடக்கும் அங்குசம். ஜென்ம பாப வலைதனில் இருந்து மீட்கும் பாசம், சுகபோகத்தினை நல்கும் நீலோத்பவ மலர் மற்றும் தன் திருவடிகளை தஞ்சமென அடைய உயிர்கட்குக் காட்டும் வரத முத்திரை, சோமன், சூரியன், அக்னி என்ற மூன்று

கண்கள், நவரத்ன மணிமகுடம், வலது காலைத் தொங்க விட்டுக் கொண்டு அமர்ந்த கோலம் என்று அன்னை நம் மனதை மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்க வைக்கிறாள்.

அன்னையின் இத்திருமேனி, அன்னை ஸ்ரீலலிதா பரமேஸ்வரியின் ரூபம் கொண்டது. ஆனந்த வாழ்வளிக்கும் அன்னை, வேண்டுபவர்க்கு வேண்டுவன அளித்து ஆனந்தம் நல்குகிறாள். நம் அன்னை வரப்ரதாயினி. ஞானச்சுடராய் விளங்கி பெருங்கருணையோடு ஜீவன்களைக் காத்து அருளும் அன்னையினைக் காண கண்கள் கோடி வேண்டும்.

உலக வாழக்கையை வெறுத்து விரக்தியுடன் வந்து தரிசனம் செய்யும் பக்தனுக்கு முக்தி அளிக்கும் சக்தி கொண்டவள் காளிகாம்பாள். அம்பாளைப் பார்க்கும்போது, அவள் நம்மை பாசத்தோடும், நேசத்தோடும் பார்ப்பது போலவே இருக்கும். அன்னை காளிகாம்பாள் தலத்திலும் இதை நாம் உணரலாம்.

காளிகாம்பாளும் நாம் வேண்டுவதை, ஒரு தாய் தன் பிள்ளையிடம் எப்படி கருணையோடு கேட்பாளோ, அந்த மாதிரி கேட்பாள். அவள் முகத்தை பார்க்கும் போது, ஆயிரம் கோடி சூரிய பிரகாசம் ஒரே நேரத்தில் ஒளியை வெளிப்படுத்துவது போல இருக்கும். தீபாராதனை காட்டும் போது காளிகாம்பாளை நன்கு உன்னிப்பாகப் பார்த்தால் அவள் விழிகள் சுடர் விழிகள் போல மாறி இருக்கும்.

கருவறையில் அம்பாள் வீற்றிருந்த கோலத்தில் இருக்கிறாள். வலது மேல் கையில் அங்குசம் ஏந்தியுள்ளாள். இடது மேல் கையில் பாசம் உள்ளது. வலது கீழ் கையில் தாமரை புஷ்பமும், இடது கீழ் கையில் வரஹஸ்தமும் வைத்துள்ளாள். மேலும் இடது காலை மடக்கி, வலது காலை தொங்க விட்டபடி அமர்ந்துள்ளாள். அந்த கால் பாதம் தாமரை மலர் மீது படியும்படி அமர்ந்து இருக்கிறாள்.

இந்த அன்னையை வணங்கினால் சக்தி மட்டுமல்ல பதவி உயர்வு,



திருமணம், குழந்தை பாக்கியம் என்று பக்தர்கள் கேட்கும் எதையும், கேட்பதற்கு முன்பாகவே அள்ளி அள்ளிக் கொடுப்பவள். இந்த காளிகாம்பாளை வணங்கினால் பாவ மூட்டைகள் எல்லாம் தொலையும், தடைப்பட்ட காரியங்கள் நிறைவேறும். மகாலக்ஷ்மியை ஒரு கண்ணாகவும் சரஸ்வதிதேவியை இன்னொரு கண்ணாகவும் கொண்டு வீற்றிருக்கும் காளிகாம்பாள், தனம், தானிய லாபத்தையும், கல்வி, ஞானச் செல்வங்களையும் அள்ளி அள்ளித் தந்தருள்வாள்.

அம்பாளின் கருவறையைச் சுற்றி ஸ்ரீஅருணாசலேஸ்வரர், நவக்கிரகங்கள், வள்ளி தெய்வானையுடன் ஸ்ரீசுப்ரமண்யர், ஸ்ரீவீரபஹாமங்கர் மற்றும் அவரது சீடர் சித்தையா, ஸ்ரீ கமடேஸ்வரர், ஸ்ரீதுர்கா, ஸ்ரீசண்டிகேஸ்வரர், பிரம்மா, சூரிய சந்திரர் சந்நிதிகள் அமைந்துள்ளன.

வெளிப்பிரகாரத்தில் ஸ்ரீஸித்தி விநாயகர், கொடி மரம், வள்ளி, தெய்வானையுடன் கூடிய ஸ்ரீ வட கதிர்காம முருகன், ஸ்ரீஸித்திபுத்தி விநாயகர், ஸ்ரீகாயத்ரி, ஸ்ரீதுர்கா, யாகசாலை,




ஸ்ரீநடராஜர், ஸ்ரீமகாமேரு,ஸ்ரீவீரபத்திர மகா காளியம்மன், ஸ்ரீநாகேந்திரர், ஸ்ரீவிஸ்வபிரம்மா சந்நிதிகள் அமைந்துள்ளன.

### கோயில் சிறப்பு

காளிகாம்பாள் கோவில் சிவசக்தி தலமாக விளங்குகிறது. இங்கு சிவ பெருமான் கமடேஸ்வரராகவும் அருணாச்சல ஈஸ்வரராகவும் எழுந்தருளி, அருள்பாலிக்கிறார். இங்கு உண்ணாமலை அம்மனுக்கும் சந்நிதி இருக்கிறது. இதனால், இங்கு வந்து வழிபட்டால், காஞ்சியையும், திருவண்ணாமலையையும் வழிபட்ட பலன் கிடைக்கும்.

ஆதி சங்கரரின் ஸ்ரீசக்கரம் இங்கு பதிக்கப்பட்டுள்ளதால் ஸ்ரீசக்கர நாயகியாகவும் திகழ்கிறார். அந்த ஸ்ரீசக்ர தரிசனம்... ஆயிரம் மடங்கு பலன்களை வாரி வழங்கும். இக்கோவிலில் வேறு எங்கும் இல்லாத சிறப்பம்சமாக ஸ்ரீசக்கர கிண்ணித்தேர் உள்ளது. வெண்கல கிண்ணங்களால் அமைந்த இந்தத் தேரில் மின்னும் விளக்கொளியில் அன்னை பவனி வரும் காட்சியைக் காண கண்கோடி வேண்டும்.

குபேரன் இத்திருத்தலத்திற்கு வந்து அம்பாளை வழிபட்ட பின்னரே அவருக்கு செல்வம் அதிகரித்தது என்ற புராணங்கள் கூறுகின்றது.

மராட்டிய சிங்கம் சத்ரபதி சிவாஜி 1677-ஆம் ஆண்டு ஸ்ரீகாளிகாம்பாளை வழிபட்ட பின்னரே சிவாஜி தன்னை சத்ரபதியாக முடிசூட்டிக் கொண்டார் என்பது வரலாறு.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் யாதுமாகி நின்றாய் காளி என்று தான் எழுதிய பாடல் அன்னை ஸ்ரீ காளிகாம்பாளை மனதில் வைத்து எழுதப்பட்டதாகும். மகாகவி பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பணியாற்றியபோது காளிகாம்பாளை வந்து வழிபடுவது வழக்கம். அப்போதுதான் 'யாதுமாகி நின்றாய் காளி, எங்கும் நீ நிறைந்தாய் காளி!' என்னும் புகழ்பெற்ற பாடலை அன்னையை நினைத்துத்தான் பாடினார்.

சித்திரை மாதத்தில் வசந்த நவராத்திரி, சித்ரா பௌர்ணமி, வைகாசியில் பிரம்மோற்ஸவம், ஆடியில் வசந்த உற்ஸவம், வெள்ளிக்கிழமைகளில் ஊஞ்சல் உற்ஸவம், ஆடிக்கிருத்திகை, ஆவணியில் விநாயக சதுர்த்தி, புரட்டாசியில் சாரதா நவராத்திரி, ஐப்பசியில் கமடேஸ்வரர் மற்றும் அண்ணாமலையாருக்கு அன்னாபிஷேகம் என விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

செவ்வாய் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் ராகு காலத்தில் எலுமிச்சை பழத்தில் தீபம் ஏற்றி வழிபட்டால், தீய சக்திகள் நம்மை அண்டாது. எதிர்ப்புகள் விலகிவிடும் என்கிறார்கள் பக்தர்கள்.

கந்த சஷ்டி, திருக்கார்த்திகை சோமவாரம், கார்த்திகை தீபத்திருவிழா, மார்கழியில் மாணிக்கவாசகர் உற்சவம், நடராஜர் ஆருத்ரா தரிசனம், அம்பாளின் தீர்த்தவாரி, தை மாதத்தில் புஷ்பாஞ்சலி, வெள்ளிக்கிழமைகளில் ஊஞ்சல் உற்சவம், மகுடாபிஷேகம் என உத்ஸவங்களும் சிறப்பு ஆராதனைகளும் விமரிசையாக நடைபெறுகின்றன.

திருமணமாகி குழந்தை இல்லாதவர்கள் ஸ்ரீகாளிகாம்பாள் கருவறையில் உள்ள மூலவருக்கு மஞ்சளால் அபிஷேகம் செய்து அந்த மஞ்சளைப் பயன்படுத்தி வந்தால் தடைப்பட்ட திருமணம் விரைவில் கைகூடும் என்பது ஐதீகம்!

## குங்குமப் பிரசாதம்


காளிகாம்பாள் குங்குமம் பெற்றாலே முக்தி. சிவபெருமானுக்கு விபூதி ஐஸ்வர்யமாக திகழ்வதுபோல், அம்பிகைக்கு குங்குமம் ஐஸ்வர்யமாகத் திகழ்கிறது. மங்கலங்கள் அருளும் அம்பிகையின் திருமேனியில் இருந்து தோன்றியதுதான் மஞ்சள். அந்த மஞ்சளில் இருந்து தோன்றியதுதான் குங்குமம். அம்பிகையின் அருட் பிரசாதமான குங்குமத்தில் அம்பாளின் துவாரசக்திகளான ஜெயா, விஜயா ஆகியோர் இருப்பதாக ஐதீகம். எனவே நெற்றியில் குங்குமம் தரித்துக்கொண்டால், அவ்விருவரும் தேவிக்கு காவலாக இருப்பதைப் போலவே, நமக்கும் காவலாக இருந்து சகலவிதமான ஆபத்துகளில் இருந்தும் காப்பாற்றுவார்கள் என்பது உறுதி.


மேலும், மேற்கு நோக்கிய நிலையில் உள்ள ஸ்ரீஆஞ்சநேயரை சனிக்கிழமைகளில் வழிபட்டால் நினைத்த காரியம் கைகூடும் என்பது நம்பிக்கை. காரியம் யாவிலும் வெற்றி உண்டாகும்.

பௌர்ணமி அன்று இரவு 7 மணிக்கு காளிகாம்பாளுக்கும், ஸ்ரீகாயத்ரி தேவிக்கும் கூட்டு வழிபாடும், ஒவ்வொரு அமாவாசை அன்று இரவு 7 மணிக்கு ஸ்ரீ விராட் விஸ்வ பிரம்மத்திற்கு விசேஷ பூஜையும், கூட்டு வழிபாடும் நடைபெறுகின்றது.

# திங்கள் ஒரு திருக்குறள்

கருத்தோவியம்: **சிவன்மலை பித்தன் நடராசன்**






**அடக்கம் உடைமை**
(மனம் மொழி மெய்களால் அடக்கத்துடன் வாழ்தல்)

**122**

காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்
அதனின்ஊங்கு இல்லை உயிர்க்கு.

ஓர் உயிர்க்கு அடக்கத்தைக் காட்டிலும் சிறந்த செல்வம் இல்லை. ஆதலின் அடக்கத்தை உறுதிப்பொருளாக எண்ணிப் பாதுகாக்க.

## திருக்குறள் கதை

கதை: பேராசிரியர் **கா.முருகேசன்,** சென்னை

### அடக்கத்தை கடைபிடிப்போம்!

உயிர்கள் அனைத்திற்கும் அடக்கம் மிக அவசியம். அடக்கம் அமரருள் உய்க்கும் என்பது வள்ளுவர் வாய்மொழி.

அந்த ஊரில் வாழ்ந்து வந்த மாடசாமி அடக்கத்தின் சிறப்பை நன்கு உணர்ந்திருந்தான். கடமையைக் கண்போலப் போற்றி பாதுகாப்பதும், ஒழுக்கத்தை ஓம்பி ஒழுகலும் அடக்கத்திற்கு அரணாக விளங்குகின்றன மாடசாமி அடக்கத்தை இலக்கணமாய்க் கொண்டு இலக்கியமாய் வாழ்ந்தான்.

ஆதவன் கிழக்கில் அதிபிரகாசமாய் விளங்கினான். மாடசாமி தன் குடிசையில் இருந்த வெளியே வந்தான். கலப்பையைத் தன் தோளில் சுமந்துகொண்டு தன் கடமையை நிறைவேற்ற புறப்பட்டான்.

தன் முதலாளி இட்ட கட்டளையை மாடசாமி சிரமேற்கொண்டு செயல்பட்டான். முதலாளி தன் காளைகளுடன் மாடசாமிக்கு முன்பாகவே வயலுக்கு வந்துவிட்டார். உழு கருவி கலப்பையுடன் மாடசாமி செல்லவும் அதிகாலைப் பணியை அதிவிரைவாய் முடிக்கத் திட்டமாய் இருந்தனர்.

மாடசாமியைப் போன்றே அவனது நாயும் அடக்கத்தின் உருவகமாகத் திகழ்ந்ததைப் பார்க்கும்போது ஆச்சரியம் ஏற்படுகிறது. அந்த நாய் அடக்கத்துடன் அதன் முன்காலை நீட்டியும், வாலினை உயர்த்திக் காட்டியும் மாடசாமிக்கு வணக்கம் கூறியது.

மனிதர்களிடம் விளங்கவேண்ய ஒழுக்க குணம் சாதாரண மிருகத்திடம் இருந்து வெளிப்படுவது ஓர் ஆச்சரியம்.

அடக்கம் என்பது அளப்பரிய செல்வம். அதனை நாம் அனைவரும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

# செங்குந்தர்களால் நடத்தப்பட்ட திருவிழாக்கள்



**24.02.2021** புதன்கிழமை அன்று நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் எழுகரைநாடு சூரியம்பாளையம் செங்குந்த முதலியார் சமூகத்திற்கு உட்பட்ட **அருள்மிகு மாரியம்மன், அருள்மிகு முத்துக்குமாரசாமி, அருள்மிகு வள்ளி தேவசேனா சமேத கல்யாண சுப்ரமண்ய சுவாமி மற்றும் பரிவார ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக பெருவிழா**

**24.02.2021** புதன்கிழமை அன்று நாமக்கல் மாவட்டம் மணியனூர் கிராமம் கந்தம்பாளையம் செங்குந்த முதலியார் சமூகத்தாருக்கு உட்பட்ட **அருள்மிகு முத்துக்குமார சுவாமி திருக்கோயில் ஜீர்ணோத்தாரன ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா**

**25.02.2021** வியாழக்கிழமை முதல் 12.08.2021 ஞாயிற்றுக்கிழமை வரை ஈரோடு மாவட்டம் சிவகிரி **அருள்மிகு காமாட்சியம்மன் மாசி மகம் பொங்கல் பெருந்திருவிழா**

**25.02.2021** வியாழக்கிழமை அன்று ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் ஈரோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரி வளாகத்தில் எழுந்தருளி கல்விச் செல்வத்தை வழங்கி வரும் **அருள்மிகு வித்யா கணபதி, அருள்மிகு லஷ்மி ஹயக்ரீவர், அருள்மிகு குபேர விநாயகர், அருள்மிகு பாலமுருகன், அருள்மிகுஅரசு வேம்பு விக்ன விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேக விழா**

**04.03.2021** வியழக்கிழமை வேலூர் மாவட்டம் காங்கேயநல்லூர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவதரித்த திருத்தலம் **அருள்மிகு ஸ்ரீ முருகப்பெருமான் திருக்கோயில் இலட்சதீப நல்விழா**

**11.03.2021** வியாழக்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வண்ணாங்கண்ணி **ஸ்ரீ வெற்றிவேல் முருகன் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிவன் ஸ்ரீ பார்வதி சுவாமிகளுக்கு சிவராத்திரி பூஜை**

**13.03.2021** சனிக்கிழமை அன்று ஆந்திர மாநிலம் **ஸ்ரீ காளஸ்திரி ஆலயத்தில் அருள்மிகு திருக்காளத்தீஸ்வரர் அருள்மிகு ஞானப்பிரசுன்னாம்பிகை திருக்கல்யாணத் திருவிழா**

**22.03.2021** திங்கட்கிழமை மதுரை மாவட்டம் அபிராமம் அம்பலம் செங்குந்தர் முதலியார்களால் கட்டப்பட்டதும் பரம்பரை டிரஸ்டி பாத்தியமானதுமான அபிராமம் **அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி திருக்கோயில் பங்குனி உத்திரம் 3ஆம் ஆண்டு திருக்கல்யாண பிரம்மோற்சவ விழா**




# வாழ்த்துக்கள்

திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லி பாரதியார் நகர் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் **கவிஞர் V.S.அருணாசலம்** அவர்களுக்கு 24.02.2021 அன்று தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு கே.பாண்டியராஜன் அவர்களால் **அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்** என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் **கவிஞர் V.S.அருணாசலம் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைக்கு ரூபாய் 2,000 /- நன்கொடை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.**

## பாவேந்தர் பாரதிதாசன்

**செங்குந்தர் குலச் சான்றோர் பொன்மொழிகள்**



- ★ பிறரிடம் எதற்காகவும் கையேந்தக்கூடாது. பிறரிடம் கையேந்துபவன் தன்னைத்தானே விலைப்படுத்திக் கொள்கிறான்.
- ★ தமிழ் உயர்ந்தால் தமிழன் உயர்வான்
  தமிழ் தாழ்ந்தால் தமிழன் வீழ்வான்
- ★ தெய்வம் அறிவுக் கடலாக உள்ளது. அக்கடலில் நாம் ஒவ்வொருவரும் ஒரு திவலைகளாக இருக்கிறோம்.
- ★ அறிவே அனைத்திலும் சிறந்தது. மனம் அதற்கு அடங்கி நடந்தால் வாழ்வு சிறந்து விளங்கும்.

# செங்குந்தர் விருது அறிவிப்பு

செங்குந்தர் சமுதாயத்தில் அரசியல், ஆன்மீகம், இலக்கியம், அறிவியல், ஆராய்ச்சி, மருத்துவம், கல்வி, சமூகப்பணி ஆகியவற்றில் சிறந்து விளங்கும் வாழ்நாள் சாதனையாளர்களை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் விருதுகள் வழங்கி பாராட்ட முடிவு செய்துள்ளது.

எனவே, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் மேலே கண்ட துறைகளில் சிறந்த விளங்குபவர்கள் உங்கள் மாவட்டத்தில் இருந்தால் மாவட்டத் தலைவர் மூலமாக அத்தகையவர்களின் விபரங்களை (Biodata) புகைப்படத்துடன் பெற்று 15–04–2021 தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.



*பொதுச்செயலாளர்,*
*தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,*
*எண். 25, வள்ளல் சபாபதி மெட்ரிக்*
*மேல்நிலைப்பள்ளி வளாகம்,*
*சேத்துப்பட்டு, சென்னை – 600 030.*
*கைபேசி: 97911 17261*

# தலைமைச் சங்க கல்வி ஊக்கப் பரிசு அறிவிப்பு

2021-ம் ஆண்டு ஏப்ரல் / மே திங்களில் பாரதிதாசன் அறக்கட்டளை சார்பாக +2 தேர்வில் உயர்மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்கு மாநில அளவிலும், மண்டல அளவிலும் முதல் நிலை பெறும் 3 மாணவர்களுக்கு கல்வி ஊக்கப் பரிசு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தால் வழங்கப்பட இருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| மாநில அளவில் | | = | 3 |
| 5 மண்டலம் | 5X3 | = | 15 |

மேற்படி ஊக்கப் பரிசு பெறுவதற்கான விண்ணப்பத்தை உரிய மதிப்பெண் மற்றும் சாதி சான்றிதழ்களுடன் 15-04-2021 தேதிக்குள் தலைமைச் சங்கத்தின் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி, அந்தந்த மாவட்ட சங்கத்தின் தலைவர்/ செயலர்/ செயற்குழு உறுப்பினர் மூலமாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பொதுச்செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,
எண். 25, வள்ளல் சபாபதி மெட்ரிக்
மேல்நிலைப்பள்ளி வளாகம்,
சேத்துப்பட்டு, சென்னை - 600 030.
கைபேசி: 97911 17261

**ஆயுள் உறுப்பினர்**
**கட்டணம்: ரூ. 100**
**செங்குந்த மித்திரன்**
**15 ஆண்டு சந்தா: ரூ. 1000**

**வங்கி விவரம்:**

**South Indian Senguntha Mahajana Sangam**

SB A/c No : **020100050304358**
Bank : **Tamilnadu Mercantile Bank Limited**
Branch : George Town, Chennai - 600001
IFSC : **TMBL0000020**

**அல்லது**

**South Indian Senguntha Mahajana Sangam**

SB A/c No : **527402010002485**
Bank : **Union Bank of India**
Branch : Armenian Street Branch, Chennai
IFSC : **UBIN0552747**

**அல்லது எந்த வங்கியிலிருந்தும் மேற்கண்ட கணக்கின் பெயருக்கு DD எடுத்தும் அனுப்பலாம்.**

**பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளை**
**Pavendar Bharathidasan Arakkattalai**

SB A/c No. : **420141716**
Bank : **Indian Bank**
Branch : MGT Branch, Thambu St, Chennai
IFSC : **IDIB000M002**

## செங்குந்தர் மாளிகை

செங்குந்தர் மாளிகை தற்போது சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தங்குவதற்கு ஏற்ற நிலையில் முழு சுகாதார, குடிநீர் வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

வெளியூர்களிலிருந்து வரும் உறவினர் பெருமக்கள் கீழ்க்கண்ட தொலைபேசி எண்ணை பயன்படுத்தி முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொலைபேசி எண்: 044-25226852**

## விடுதி கட்டணம்

| | |
|---|---|
| சிங்கிள் ரூம் | : ரூ. 250/– |
| டபுள்ஸ் ரூம் | : ரூ. 500/– |
| டபுள்ஸ் ரூம் ஏ/சி | : ரூ. 750/– |

**மாத வாடகைக்கும் அறைகள் தங்குவதற்கு விடப்படுகின்றன.**

| | |
|---|---|
| சிங்கிள் ரூம் (பொது) | ரூ. 6,000/– |
| முன்பணம் | ரூ.30,000/– |
| சிங்கிள் ரூம் உறுப்பினர் | ரூ. 5,000/– |
| முன்பணம் | ரூ.25,000/– |
| டபுஸ் ரூம் (பொது) | ரூ.10,000/– |
| முன்பணம் | ரூ.50,000/– |
| உறுப்பினர் | ரூ. 9,000/– |
| முன்பணம் | ரூ.45,000/– |

*தற்போது இரவு / பகல் முழு நேரமும் பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.*

**– நிர்வாகம்**

# அறிவிப்பு

செங்குந்த மித்திரன் சந்தாதாரர்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள்:

செங்குந்த மித்திரன் இதழ் தொடர்பான சந்தேங்களுக்கும், புகார்களுக்கும் கீழ்க்கண்ட அலைபேசி எண்: **97911 17261**-க்கு தொடர்பு கொள்ளவும். செங்குந்த மித்திரன் இதழ் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் சந்தா எண், முகவரி மற்றும் அலைபேசி எண்ணுடன் அஞ்சலில் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறந்து போன சந்தாதாரர்களின் விபரங்களை சம்பந்தப்பட்ட குடும்பத்தினர் தெரிவிப்பதோடு, குடும்ப உறுப்பினர்கள் எவரேனும் ஒருவர் பெயரில், ஆதார் அடையாள அட்டை எண்–ஐ பயன்படுத்தி புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

# அறிவிப்பு

திருமண தகவல் மையம் செவ்வாய் கிழமை தவிர அனைத்து நாட்களிலும் செயல்படும்.

**ஜாதகப் பதிவுக் கட்டணம்**
**(1 வருடம்) ரூ. 500/-**

**அலுவலக நேரம்:**

**தினசரி காலை 11.00 மணி முதல்**
**இரவு 7.00 மணி வரை**

- பொதுச்செயலாளர்,
தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்


செங்குந்த மித்திரன்

RNI No. TNTAM/2000/03982


செங்குந்த மித்திரன் சீரார் இதழ்வாழி
எங்குந்தன் பேர்பரப்பும் ஈடில்லாப் - பொங்குந்தன்
கூத்தர் குலம் வாழி! கோலத் தமிழ் வாழி!
ஏத்துநலம் வாழி இசைந்து

- வாரியார் சுவாமிகள்


**மார்ச் 2021 மலர்: 21 இதழ்: 3**

**ஆசிரியர்:**

**K.P.K.செல்வராஜ்**


**சந்தா விபரம்**

**தனி இதழ் : ரூ. 15/-**

**15 ஆண்டு சந்தா : ரூ. 1000/-**

**1-12-2020 முதல் புதிய விளம்பரக் கட்டண விபரம்**

**கலர்**

| | | |
|---|---|---|
| நடுப்பக்கம் | : | ரூ. 15,000 |
| முன் உள்அட்டை | : | ரூ. 10,000 |
| பின் அட்டை | : | ரூ. 10,000 |
| பின் உள்அட்டை | : | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | : | ரூ. 5,000 |
| அரைப்பக்கம் | : | ரூ. 2,500 |
| கண்ணீர் அஞ்சலி (B&W) | | ரூ. 3,500 |


**தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்**

**South Indian Sengunta Mahajana Sangam**

எண்.58, (ப. எண்.89), அரண்மனைக்காரன் தெரு,
சென்னை-600001. தொலைபேசி : 044 - 25226852

**நிர்வாக அலுவலகம் (கடிதம் & தொடர்புக்கு)**

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம் (பச்சையப்பன் கல்லூரி பின்புறம்).
எண்.25, ஆரிங்டன் சாலை, சென்னை-600030.
Phone: 044 - 42042668, 97911 17261

E-mail: sengunthamithiran@gmail.com
http://www.sengunthamithiran.in

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்
# ஆயுள் உறுப்பினர்,
# செங்குந்த மித்திரன் ஆயுள் சந்தா
# தகவல் படிவம்

ஆயுள் உறுப்பினர் எண் :

செங்குந்த மித்திரன் சந்தா எண் :

புகைப்படம்

1. பெயர்
2. தந்தை / கணவர் பெயர்
3. வயது    பிறந்த தேதி
4. கல்வி    5. இரத்த வகை
6. தொழில்
7. முகவரி

அஞ்சல் எண்

8. மாவட்டம்/மாநிலம்
10. மொபைல் எண்
11. வாக்காளர் அட்டை எண்
12. ஆதார் எண்
13. மின்னஞ்சல் முகவரி

நமது சங்கத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடப்பேன் எனவும், செங்குந்த சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கு என்னால் இயன்றளவு ஒத்துழைப்பேன் எனவும் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மை எனவும் உறுதியளிக்கிறேன்.

நாள்:    கையொப்பம்

**அனுப்பவேண்டிய முகவரி:**

**பொதுச்செயலாளர், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்,**
**எண்.25, ஆரிங்டன் சாலை, வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி வளாகம்**
**(பச்சையப்பன் கல்லூரி பின்புறம்), சென்னை-600030**

# வாழ்க மணமக்கள்

**25.01.2021** திங்கட்கிழமை அன்று புதுச்சேரியில் நடைபெற்ற **திரு. R.ஆனந்தபாஸ்கர் செங்குந்தர் - திருமதி A.ஐமுனா** ஆகியோரது மகள்
**A.பூங்குழலி M.B.B.S. - V.அரவிந்த் M.B.B.S. F.Diab.,**

**01.02.2021** திங்கட்கிழமை அன்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற திருவள்ளூர் மாவட்ட முன்னாள் தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர் **திரு.S.N.தியாகராஜன் செங்குந்தர் - திருமதி ரஜினி தியாகராஜன்** ஆகியோரது மகன் **T.R.யோகு (எ) யோகானந்தம் B.Tech., - S.காயத்ரிதேவி B.D.S.,**

**15.02.2021** திங்கட்கிழமை மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற **திரு. A.P.S.சேகர் செங்குந்தர் - திருமதி S.தேவி** ஆகியோரது மகன்
**S.சதீஸ்குமார் B.E., - C.காயத்ரி (எ) காவியா M.B.A.,**

**24.02.2021** புதன்கிழமை அன்று தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் நடைபெற்ற தஞ்சாவூர் மாவட்ட செ.ம.சங்கத்தின் துணைத் தலைவர்
**திரு. T. திருநவுக்கரசு செங்குந்தர் - கீதா திருநாவுக்கரசு** ஆகியோரது மகள்
**T.அனிதா B.Tech., - R.மனோஜ்குமார் B.Tech.,**

**24.02.2021** புதன்கிழமை அன்று சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டையில் நடைபெற்ற **திரு.L.செல்லபாண்டியன் செங்குந்தர் - திருமதி S.ராணி** ஆகியோரது மகன் **S.ரமேஷ் B.E., M.B.A., - A. அனுப்பிரியா B.Tech.,M.B.A.,**

**24.02.2021** புதன்கிழமை அன்று கோவையில் நடைபெற்ற
**திரு.M.கணேசன் செங்குந்தர் - திருமதி சுசீலா (எ) G.கிருஷ்ணவேணி** ஆகியோரது மகள் **G.ராதிகா B.E., - R.ஜெயவர்த்தணன் B.E.,**

**24.02.2021** புதன்கிழமை அன்று திருவண்ணாமலையில் நடைபெற்ற **திரு. S.பாண்டியன் செங்குந்தர் - திருமதி அன்பழகி பாண்டியன்** ஆகியோரது மகள்
**P.ஸ்ரீதேவி M.B.B.S., M.D., - R.விஜயகுமார் M.B.BS.,**

**24.02.2021** புதன்கிழமை அன்று திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் நடைபெற்ற திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி **திரு. G.சீனிவாசன் செங்குந்தர் - திருமதி மாலதி சீனிவாசன்** ஆகியோரது மகன்
**S.வினோத்குமார் B.E.,M.B.A.,- M.சுவேதா B.E.,**

**24.02.2021** வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் நடைபெற்ற
**திரு. A.M.சுப்பிரமணி செங்குந்தர் - திருமதி விஜயலட்சுமி** ஆகியோரது மகள் **S.ராகவி M.E., - K.கார்த்திக்கேயன் B.E.,**

**24.02.2021** புதன்கிழமை அன்று நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நடைபெற்ற நாமக்கல் மாவட்ட செ.ம.சங்கத்தின் முன்னாள் தலைவர் **திரு.T.M.முருகேசன் செங்குந்தர்** அவர்களின் பேரனும்
**திரு. K.ராஜரத்தினம் செங்குந்தர் - திருமதி R.ஜெயந்தி** ஆகியோரது மகனுமாகிய **R.ஸ்ரீராம் சுந்தர் FCA.,- B.ரோகிணி B.E.,**

*ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*



செங்குந்தர் குலச் செம்மல்கள் கொடிகாத்த தியாகி. திருப்பூர் குமரனுக்கு மணிமண்டபம் அமைத்து தரவும், அருள்மொழியரசு வள்ளல் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் பிறந்தநாளை அரசு விழாவாக கொண்டாடவும் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு எடப்பாடி. கே.பழனிச்சாமி அவர்களிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வலியுறுத்தி உடனடியாக நிறைவேற்றிக்கொடுத்த தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர் கைத்தறிக் கதிரவன் K.P.K.செல்வராஜ் அவர்களுக்கு, வேலூர் மாவட்ட வாரியார் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் கொடைவள்ளல் கே.எம்.ஜி. இராஜேந்திரன், தெ.செ.ம.சங்கத் துணைத்தலைவரும், வேலூர் மாவட்டத்தலைவருமான சி.என்.தட்சிணாமூர்த்தி, திருப்பத்தூர் மாவட்டத் தலைவர் கே.சம்பத்குமார், நல்லாசிரியர் எல்.டி.மோகன், வேலூர் மாவட்டச் செயலாளர் எம்.ரவி, ஆம்பூர் ரவி, ஆம்பூர் ஜீவானந்தம், நெசவாளரணி குடியாத்தம் பாலாஜி மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு நன்றி தெரிவித்தனர்.

# வாழ்க மணமக்கள்

**05.03.2021** வெள்ளிக்கிழமை அன்று சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டையில் நடைபெற்ற **திரு.S.மாதேஸ்வரன் செங்குந்தர் - திருமதி விஜயா** ஆகியோரது மகன் **M.சந்திரசேகரன் B.E.,- G.அபிராமி B.E.,**

**10.03.2021** புதன்கிழமை அன்று நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் நடைபெற்ற நாமக்கல் மாவட்ட முன்னாள் தலைவர் **திரு.M.மாதேஸ் செங்குந்தர் - திருமதி M.கலாராணி** ஆகியோரது மகன் **M.சௌந்தர்ராஜன் B.Tech., - தையல்நாயகி (எ) S.M.பொன்மஞ்சரி M.Sc.,**

*ஆகியோரது திருமணத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*



# திருபுவனம் கூட்டுறவு சங்கத்திற்கு பாராட்டு

தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் திரு.K.P.K.செல்வராஜ் அவர்கள் 28.02.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று நேரில் விஜயம் செய்தார்.

இந்தக் கூட்டுறவு சங்கம் ஆரம்பித்து ஏறக்குறைய 70 ஆண்டுகள் ஆகின்றது. இச்சங்கம் செங்குந்தர்களால் ஆரம்பிக்கப்பட்டதாகும். இச்சங்கத்தின் முதல் தலைவர் மன்னார்குடியை சேர்ந்த ராமானுஜ செங்குந்தர் அவர்கள் ஐந்தாண்டு காலம் பதவி வகித்தார். அதன் பிறகு இயக்குனர்களாக A.கோவிந்தராஜ் செங்குந்தர் அவர்களும், R.கருணாநிதி செங்குந்தர் அவர்களும் சிறப்பாக கூட்டுறவு சங்க வளர்ச்சிக்கு 10 ஆண்டு காலம் பாடுபட்டு உழைத்தார்கள். அதன் பிறகு நமது சமூகத்தை சேர்ந்தவர்கள் 40 ஆண்டு காலம் மேற்படி சங்கத்தின் இயக்குனர்களாக வெற்றிபெற முடியாத நிலையில், கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு நமது சமூகத்தை சேர்ந்தவர்கள் இரண்டுபேர் வெற்றி பெற்று G.தியாகராஜன் செங்குந்தர் அவர்கள் தலைவராகவும், திரு.M.சேகர் செங்குந்தர் அவர்கள் இயக்குனராகவும் பதவிவகித்து வருகிறார்கள்.

இச்சங்கத்தில் 1800 பேர் அங்கத்தினர்களாக உள்ளனர்.இச்சங்கத்தில் இதுவரை இல்லாத அளவில் ஆண்டிற்கு ஐம்பது கோடி ரூபாய் முதல் அறுபது கோடி ரூபாய் வரை விற்பனை செய்யப் படுகிறது. இதில் வரும் லாபத்தில் அங்கத்தினர்களுக்கு போனசாக வழங்கப்படுகிறது என்பதை திருபுவனம் செங்குந்த மகாஜன கல்வி சங்கத்தினர் பெருமையுடன் தலைவரிடம் பகிர்ந்துகொண்டனர்.



# தாராசுரம் கிளைச் சங்க முப்பெரும் விழா

தாராசுரம் கிளைச்சங்கத்தின் 8 ஆம் ஆண்டு கல்வி ஊக்கப்பரிசளிப்பு விழா, மாவட்டத்தைச் சேர்ந்த தலைமை சங்க செயற்குழு உறுப்பினர்கள், தாராசுரத்தை சேர்ந்த மாவட்ட நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா என முப்பெரும் விழாவாக 28.02.2021 அன்று மாலை பார்வதி திருமண மண்டபத்தில் கிளைச் சங்க தலைவர் D.ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

A.அன்பழகன், முத்தையன், A.ஜீவானந்தம், S.ராஜேந்திரன் மற்றும் A.சரவணகுரு ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாணவிகள் R.சந்தியா, S.தாமரைச்செல்வி மற்றும் N.கீர்த்திகா ஆகியோர் பாடிய இறைவணக்கத்துடன் விழா ஆரம்பமாகியது. அய்யப்பன் அவர்கள் உறுதிமொழி வாசிக்க மற்றவர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

கிளைச் செயலாளரும், மாவட்ட பொருளாளருமான M.சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட அமைப்பு அணி துணைச் செயலாளரும், இணைத் தலைவருமாகிய D.ராஜேந்திரன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். கிளைச் செயலாளர் M.சந்திரசேகரன் அவர்கள் ஆண்டறிக்கை வாசித்தார்.

மாணாக்கர்களுக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் A.மணிகண்டன், மாவட்ட செயலாளர்கள் T.ரெங்கசாமி, V.சுவாமிநாதன், மாவட்ட துணைத்தலைவர்கள் S.வைரவேல், G.தங்கவேல், முன்னாள் மாவட்ட பொதுச்செயலாளர் V.S.கலியபெருமாள், மாவட்ட துணைபொதுச்செயலாளர் S.சோலைமுத்து தலைமை சங்க செயற்குழு உறுப்பினர் S.சீனிவாசன், மற்றும் மாவட்ட பொதுச்செயலாளர் சோ.காசிநாதன் ஆகியோர்கள் கல்வி



வளர்ச்சிக்கு உரிய, அறிய அறிவுரைகளை வழங்கினார்கள்.

மாணாக்கர்களுக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க தலைவரும், கைத்தறிக் கதிரவன், இளைஞர்களின் எழுச்சி நாயகன் K.P.K.செல்வராஜ் அவர்கள் பரிசுகளை வழங்கி அறிவுப்பூர்வமான அறிவுரைகள் வழங்கினார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மாநில செயற்குழு உறுப்பினர்கள் S.சிவா, சோ.காசிநாதன், M.சந்திரசேகரன், V.M.பாஸ்கரன், S.சீனிவாசன் மற்றும் GM.தாஸ் ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தாராசுரத்தை சேர்ந்த மாவட்ட பொருளாளர் M.சந்திரசேகரன், மாவட்ட அமைப்பு அணி துணை செயலாளர் D.ராஜேந்திரன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் திருமதி.R.நீலாவதி, மாவட்ட மகளிர் அணி மண்டல அமைப்பாளர் திருமதி.R.ஆனந்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் M.முகிலன், மற்றும் மாவட்ட மாணவர் அணி மண்டல அமைப்பாளர் G.ஸ்ரீராம் ஆகியோருக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

S.சீனிவாசன் அவர்கள் ஏற்புரை தெரிவித்தார். கிளைச்சங்க பொருளாளர் P.ரமேஷ்குமார் அவர்கள் நன்றியுரை கூற விழா இனிதே முடிவுற்றது.




24.02.2021 புதன்கிழமை அன்று வேலூர் மாவட்டம், பள்ளிகொண்டாவில் நடைபெற்ற குடியாத்தம் தொழிலதிபர் **A.M.சுப்பிரமணி செங்குந்தர் - திருமதி. விஜயலட்சுமி** அவர்களின் மகள் **S.ராகவி M.E., - கார்த்திகேயன் B.E.,** அவர்களின் திருமண விழாவில் வாரியார் கல்வி அறக்கட்டளை தலைவர் K.M.G.ராஜேந்திரன், தெ.செ.ம.சங்கத் துணைத் தலைவரும், வேலூர் மாவட்டத் தலைவருமான C.N.தட்சணாமூர்த்தி, மாவட்ட செயலாளர் M.ரவி, S.மோகனராமன், திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் N.மாணிக்கவாசகம், S.ரவிச்சந்திரன், கார்த்தி, பொருளாளர் பிரகாஷ், பள்ளிகொண்டா கைலாஷ், குமரவேல் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.



## வாரியார் சுவாமிகள் பிறந்த நாள் அரசு விழாவாக அறிவித்தமைக்கு பாராட்டு

அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பிறந்த தினமான ஆகஸ்ட் மாதம் 25ம் தேதி அரசு விழாவாக கொண்டாடபடும் என அறிவித்தமைக்கு 03-02-2021 அன்று வேலூர் மாவட்டம் சத்துவாச்சாரியில் மாவட்டப் பொருளாளர் M.மார்க்கபந்து அவர்கள் தலைமையில் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி அறிவிப்பு கூட்டம் நடைபெற்றது. நிறைவில் சங்க உறுப்பினர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

---



## கள்ளக்குறிச்சி மாவட்ட சங்கக் கூட்டம்

கள்ளக்குறிச்சி மாவட்ட செங்குந்த மகாஜன சங்கக் கூட்டம் 28.02.2021 அன்று மாவட்டத் தலைவர் S.M.செந்தில் அவர்கள் தலைமையிலும், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ப.தெய்வநாயகம், அ.ராஜேந்திரன், கே.வேலு ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் M.செந்தில்குமார் ஆண்டறிகை வாசித்தார். கூட்டத்தில் மாவட்ட துணை பொறுப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டது. மாவட்ட அலுவலகம் திறப்பது என்றும், புதிய கிளைச் சங்கங்கள் துவங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. கூட்ட நிறைவில் மாவட்ட பொருளாளர் மு.இராமர் நன்றியுரையாற்றினார். மாவட்ட கிளை சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




24.02.2021 புதன்கிழமை அன்று நடைபெற்ற திருப்பூர் தாலுக்கா செங்குந்த மகாஜன சங்கத்தின் பொருளாளரும், சமுதாய பொருளாதார தொண்டு மன்றத்தின் கோவை மண்டல செயற்குழு உறுப்பினருமான

**வேணி திரு.மா.செல்வராஜ் – திருமதி S.புஷ்பலதா** ஆகியோரது மகன்

**S.தீபக்ராஜ் ITI Diploma – R. சிவகார்த்திகா B.Sc.,**

வருகைதந்து வாழ்த்திய அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**செங்குந்தமித்திரன் வளர்ச்சி நிதியாக ரூ.5000 தலைமைச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்கள்.**






திருத்தணியில் 24-02-2021 புதன்கிழமை அன்று காலை நடைபெற்ற சென்னை
போரூர், கொளப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தெய்வத்திரு **S.தணிகைவேலன் முதலியார்** -
திருமதி.**வே.கோவிந்தம்மாள்** அவர்களின் மகன் மற்றும் சித்தூர் மாவட்டம், நகரி, சிந்தலப்பட்டடை
கிராமத்தைச் சேர்ந்த திரு. **C.C.ஏழுமலை முதலியார்** - திருமதி. **C.E.பார்வதி** அவர்களின் மகள்
மணமக்கள்: **T.சண்முகமணிவேள்** B.E.,MBA., - **C.E.ராஜலட்சுமி** M.Sc.,B.Ed.,M.Phil., ஆகியோரின்
திருமண சுபமுகூர்த்தம் மற்றும் 23-02-2021 அன்று மாலை நடைபெற்ற
திருமண வரவேற்பு விழா நிகழ்ச்சிக்கு வருகைதந்து புதுமண தம்பதிகளை
ஆசிர்வதித்து வாழ்த்திய அனைவருக்கும் இரு குடும்பத்தாரின் சார்பாக
நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.




22.02.2021 திங்கட்கிழமை அன்று நாமக்கல் மாவட்டம் செல்லப்பம்பட்டியில் நடைபெற்ற
எங்கள் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு வாழ்த்திய அனைவருக்கும் நன்றி நன்றி
மணமக்கள் : **R. கவிப்பிரியா** B.E., – **S. முத்துக்குமார்** B.E.,
வள்ளல் திரு. **A.ராஜமாணிக்கம்** - திருமதி **R.விஜயகுமாரி**
செங்குந்தர் சமுதாய திருமணத் தகவல் மையத்தின் நிறுவனர்,
சமுதாயப் பொருளாதார தொண்டு மன்றத்தின் உள்ளூர்க் குழு முன்னாள் தலைவர்.
சிறந்த 'பணியாளர் விருது' பெற்றவர்
தாரமங்கலம், சேலம்

# திருமண விழா



22.02.2021 திங்கட்கிழமை அன்று நாமக்கல் மாவட்டம் செல்லப்பம்பட்டியில் நடைபெற்ற செங்குந்தர் சமுதாய திருமணத் தகவல் மையத்தின் நிறுவனரும், தாரமங்கலம் சமுதாயப் பொருளாதார தொண்டு மன்றத்தின் உள்ளூர்க் குழு முன்னாள் தலைவரும் சிறந்த 'பணியாளர் விருது' பெற்றவருமான வள்ளல் **திரு.A.ராஜமாணிக்கம் - திருமதி R.விஜயகுமாரி** ஆகியோரது மகள்

**R. கவிப்பிரியா B.E., - S. முத்துக்குமார் B.E.,**

வருகைதந்து வாழ்த்திய அனைவருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**செங்குந்தமித்திரன் வளர்ச்சி நிதியாக ரூ.5000 தலைமைச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்கள்.**





## சிவகிரியில் ஸ்ரீ காமாட்சி அம்மன் கோயில் திருவிழா

*26.02.2021* அன்று ஈரோடு மாவட்டம் சிவகிரியில் ஸ்ரீ காமாட்சி அம்மன் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக கலந்த கொண்ட தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஈரோடு மாவட்டச் செயலாளர் சோழா M.ஆசைத்தம்பி அவர்களுக்கு மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. செங்குந்தர் முரசு ஆசிரியர் கவிஞர் சேலம் பாலன், வெண்டிபாளையம் கிளைத் தலைவர் பிரதாப், கிளைச் செயலாளர் விக்ரம் மற்றும் சிவகிரி கிளை நிர்வாகிகள் மற்றும் இளைஞரணியினர் திரளாக பங்கேற்றனர்.



## பாராட்டுக்கள்

43 பயணிகளுடன் சென்ற பேருந்து தீப்பற்றியபோது மேலும் பரவாமல் விரைந்து அணைத்தமைக்கு மதுரை மாவட்டம் தல்லாகுளம் உறவின் முறைச் சார்ந்த நடத்துனர் **பழனிவேல் செங்குந்தர்** அவர்களுக்கு குடியரசு தின விழாவில் அரசுப் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குனர் முருகேசன் அவர்கள் **சிறந்த பணிக்கான விருது** வழங்கி கௌரவித்தார். மதுரை மாவட்ட, கிளைச்சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது.

# கோட்டை செல்வோம் வா!...

## (செங்குந்தர் இன முழக்கப் பாடல்)



(புத்தன் வந்த திசையிலே போர்... என்ற பாடல் மெட்டு)

குந்தர் குலக் கோமகனே வா..
சிந்தையிலே எழுச்சி கொண்டு வா..
வந்தனைகள் வாழ்த்து கூறி வா...
எந்தபோதும் இனத்தைக் காக்க வா.. வா.. வா.. (குந்தர்)

படையிருக்கு பலமிருக்கு வா..
மடை திறந்த வெள்ளமென வா...
கொடையும் உடையும் கொடுத்துதவும் நீ
தடைகள் நொறுக்கி துணிவுடனே வா.. வா.. வா.. (குந்தர்)

யார்க்கும் அஞ்சா நெறியுடனே வா...
போர்க்குணத்தை நெஞ்சில் நிறுத்தி வா...
பார்ப்புகழப் போரெடுப்போம் வா...
ஆர்ப்பரிக்கும் அலைகடலாய் வா.. வா.. வா.. (குந்தர்)

நாற்றிசையும் வலம் வருவோம் வா..
காற்றுபோல பரவிடுவோம் வா..
நேற்றிருந்த நிலைமை எண்ணிப் பார்..!
ஊற்றுபோல உதவி செய்ய வா.. வா.. வா.. (குந்தர்)

ஓரணியாய் கொடி உயர்த்தி வா..
பேரணியாய் கோட்டை செல்வோம் வா..
ஆண்ட பெருமை மீட்டெடுப்போம் வா..
பாண்டவர் போல் வாழ்ந்திடுவோம் வா.. வா.. வா.. (குந்தர்)

ஆசிரியர். E,லோகநாதன்,
மாநில செயற்குழு உறுப்பினர், காங்கேயநல்லூர்.



## மதுரையில் தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா

சுதந்திர போராட்ட தியாகி, செங்குந்தர்குல வீரப் பெண்மணி தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள், நினைவு நாள் 22.02.2021 அன்று மதுரை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்க அலுவலகத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தி வீர வணக்கம் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் தெ.செ.ம. சங்க பொருளாளரும், மதுரை மாவட்ட செ.ம.சங்கத் தலைவருமான R.காந்தி, மாவட்ட பொதுச்செயலாளர் B.ரவீந்திரன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் N.உதயகுமார், Dr.K.முத்துவேல், துணைத்தலைவர் A.ராமசுப்பிரமணி மற்றும் அலுவலக பணியாளர் முருகேஸ்வரி ஆகியோர் கலந்து கொண்டனர்.



## அம்பாசமுத்திரத்தில் தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா

அம்பாசமுத்திரம் செங்குந்தர் சமுதாய சங்கத்தில் 22.02.2021 திங்கள்கிழமையன்று சுதந்திர போராட்ட வீரப்பெண்மணி தில்லையாடி வள்ளியம்மை அவர்களின் 123வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. அது சமயம் சங்க தலைவர் K.S.சண்முகசுந்தரம், செயலாளர் G.நடராஜன், பொருளாளர் S.சங்கர சேகர், நிர்வாகஸ்தர் மீனாட்சிநாதன் மற்றும் சங்க உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# உதவிடுவோம் வாரீர்!



தற்போது நடைபெற்ற நீட் (NEET) தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று அரசு உதவித் தொகை மூலமாக மருத்துவப் படிப்பில் (MBBS) சேர்ந்துள்ள நமது செங்குந்த மாணவிகளின் கல்வி செலவினங்களுக்கு உதவ விரும்புவோர் அவர்களைத் தொடர்புகொண்டு உதவிட வேண்டுகிறோம்.



| | |
|---|---|
| பெயர் | : **M.லீனா பிரியதர்ஷினி** |
| | த/பெ. **S.மணிவாசகம்,** குருசாமிபாளையம், நாமக்கல் மாவட்டம். |
| நீட் மதிப்பெண் | : **625** |
| இந்திய அளவில் இடம் | : **10145** |
| படிப்பு | : **MBBS** |
| சேர்ந்திருக்கும் கல்லூரி | : **அரசு மருத்துவக் கல்லூரி, கோவை** |
| தொடர்பு எண் | : **80122 94937** |



## சத்துவாச்சாரியில் பேரறிஞர் அண்ணா நினைவஞ்சலி

*வேலூர் மாவட்டம், வேலூர் வட்டம் சத்துவாச்சாரி மாநகரில் 03.02.2021 புதன்கிழமை காலை 9.30 மணியளவில் ஸ்ரீ கெங்கையம்மன் கோயில் வளாகத்தில் முன்னாள் தலைவர் பேரறிஞர் அண்ணாதுரை அவர்கட்கு 52ம் ஆண்டு நினைவாஞ்சலி செலுத்தப்பட்டது. விழாவிற்கு சத்துவாச்சாரி செங்குந்த மகாஜன சங்க தலைவர் M.மார்கபந்து சொற்பொழிவாற்றினார். செயலாளர் M.சுதாகர் வரவேற்பு உரையும், கிளை சங்க பொருளாளர் G.ரவிசந்திரன் அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர். சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.*




தஞ்சை மாவட்டம் சுந்தரபெருமாள் கோயில் அரசு அலுவலர்கள் சங்க இரண்டாம் ஆண்டு விழா 07.03.2021 ஞாயிறு காலை 10.00 மணியளவில் நடைபெற்றது.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க கொள்கை பரப்பு செயலாளரும், தஞ்சை மாவட்ட செங்குந்தர் கல்வி சங்க பொதுச்செயலரும் ஆகிய நல்லாசிரியர் சோ.காசிநாதன் அவர்களுக்கு 77ஆம் ஆண்டு பிறந்தநாள் பாராட்டு விழா நடைபெற்றது.

விழாவில் தஞ்சை மாவட்ட பொருளாளர் M.சந்திரசேகர், மாவட்ட செயலாளர் V.சுவாமிநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தாமரைமணிகண்டன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தலைமைச் சங்க இலக்கிய அணி துணை அமைப்பாளரும், தஞ்சை மாவட்ட துணை பொதுச் செயலாளரும், கும்பகோணம் நகர சங்க தலைவரும் ஆகிய S.சோலைமுத்து அவர்கள் சிறப்புரை ஆற்றி வாழ்த்துரை வழங்கினார்.

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

### தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள்

| | |
|---|---|
| செங்குந்தர் மாளிகை | : 044 - 25226852 |
| தெ.செ.ம.சங்கம் | : 044 - 42042668 |
| வள்ளல் சபாபதி பள்ளி | : 044 - 26680482 |
| செங்குந்தமித்திரன் | : 97911 17261 |

# தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

அன்பார்ந்த உறவினர்களுக்கு,

வணக்கம். 06.04.2021 அன்று நடைபெற உள்ள தமிழக மற்றும் புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில், நமது செங்குந்தர் சமுதாயத்தைச் சேர்ந்த உறவினர்கள் பலரும், பல கட்சிகளில் கீழ்க்கண்ட விபரப்படி வேட்பாளர்களாக மனுதாக்கல் செய்துள்ளதாக அறிகிறோம்.

| வ.எண் | வேட்பாளர் பெயர் | தொகுதி | மாவட்டம் | கட்சி விபரம் |
|---|---|---|---|---|
| 1. | திரு.தா.மோ.அன்பரசன் | ஆலந்தூர் | சென்னை | திமுக |
| 2. | திரு.V.சோமசுந்தரம் | உத்திரமேரூர் | காஞ்சிபுரம் | அதிமுக |
| 3. | திரு.G.பார்த்திபன் | சோளிங்கர் | இராணிப்பேட்டை | அமமுக |
| 4. | திரு.A.ஞானசேகரன் | திருப்பத்தூர் | திருப்பத்தூர் | அமமுக |
| 5. | திரு.சேவூர் S.ராமச்சந்திரன் | ஆரணி | திருவண்ணாமலை | அதிமுக |
| 6. | திரு.S.தணிகைவேல் | திருவண்ணாமலை | திருவண்ணாமலை | பா.ஜ.க |
| 7. | திரு.S.பிரபு | ரிஷிவந்தியம் | கள்ளக்குறிச்சி | அமமுக |
| 8. | திருமதி. சுடர்விழி கல்யாணசுந்தரம் | ஜெயங்கொண்டம் | அரியலூர் | சுயேட்சை |
| 9. | திரு. K.சுப்பிரமணி | தூத்துக்குடி | தூத்துக்குடி | ஜெய் சிவசேனா |
| 10. | திரு. T.சண்முகசுந்தரம் | திருச்செங்கோடு | நாமக்கல் | சுயேட்சை |
| 11. | திரு.K.சதானந்தம் | பவானி | ஈரோடு | மக்கள் நீதி மய்யம் |
| 12. | திரு. S.A.முத்துக்குமரன் | ஈரோடு (கிழக்கு) | ஈரோடு | அமமுக |
| 13. | திரு.V.மணிமாறன் | கோபிசெட்டிப்பாளையம் | ஈரோடு | திமுக |
| 14. | திருமதி. A.விசாலாட்சி | திருப்பூர் தெற்கு | திருப்பூர் | அமமுக |
| 15. | திரு. R.மணிகண்டன் | காங்கயம் | திருப்பூர் | சுயேட்சை |
| 16. | திரு.வை.மணிகண்டன் | முத்தியால்பேட்டை | புதுச்சேரி | அதிமுக |
| 17. | திரு.S.செந்தில்குமரன் | முத்தியால்பேட்டை | புதுச்சேரி | இ.காங்கிரஸ் |
| 18. | திரு.R.V.சாமிநாதன் | லாஸ்பேட்டை | புதுச்சேரி | பா.ஜ.க |
| 19. | திரு.M.வைத்தியநாதன் | லாஸ்பேட்டை | புதுச்சேரி | இ.காங்கிரஸ் |

மேலே கண்ட பட்டியல் தவிர, ஆங்காங்கே உள்ள நமது சமுதாய வேட்பாளர்களுக்கு அவர்கள் சார்ந்துள்ள கட்சியை கணக்கில் கொள்ளாமல், அந்தந்த தொகுதியில் உள்ள சூழ்நிலைக்கேற்ப ஆதரவு அளிக்கும்படி தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் வேண்டுகோள் விடுக்கிறது. இதற்கு அனைத்து, தலைமை, மாவட்ட, மண்டல நிர்வாகிகளும் தாங்கள் சார்ந்துள்ள தொகுதிக்குட்பட்ட சமுதாய வேட்பாளர்களுக்கு முன்னின்று பிரசாரம் செய்து அவர்களின் வெற்றிக்கு பாடுபடும்படி கேட்டுக் கொள்கிறோம். நம்முடைய சமுதாயப் பிரச்சனைகளை தமிழக சட்டமன்றத்தில் எதிரொலிக்க வேட்பாளர்களின் வெற்றி முக்கியம் என்பதைக் கருத்தில் கொண்டு பணியாற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

**தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாகிகள்**

# செங்குந்த வள்ளல் - 'நல்லாசிரியர்' மூத்த தடகள வீரர்

# திரு.T.தேவராஜன் செங்குந்தர்



**பிறப்பு :**

திருவோத்தூர் கோடிப்பச்சை கோகிலம் திரு.T.தேவராஜன் செங்குந்தர் அவர்கள் திரு. கோ.மு.தணிகாசல முதலியார் - திருமதி.ஆதிலட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாக 15-6-1935 அன்று பிறந்தார். உடன் பிறந்த மூத்த சகோதரி கோகிலாம்பாள் ஆவார்.

**கல்வி :**

இவர் பள்ளிக்கல்வி S.S.L.C 1952 ஆம் ஆண்டில் நிறைவு செய்து தொழிற்கல்வியை சென்னை YMCA College of Physical Educationல் C.P.Ed பயின்றார். தேசிய மாணவர் படை NCC (Army Wing) பிரிவில் இணைந்து OTS Kompte, Nagpurலும் பயின்றார்.

**குடும்பம் :**

இவருடைய வாழ்க்கைத் துணைவியார் சரஸ்வதி அம்மாள். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள். மூத்த மகன் Dr.T.D.செங்குட்டுவன் M.Sc., M.E.Phd., அவர்கள் தேசிய இயற்பியல் ஆய்வகப் பேராசிரியர் மற்றும் மூத்த ஆராய்ச்சியாளர். இவரது மனைவி Dr.ஜெயலட்சுமி M.B.B.S.,M.D.,

இளைய மகள் T.D.முல்லை M.A., M.P.Ed., இவர் சென்னை வேப்பேரி தனியார் பள்ளியில் உதவி முதல்வர் மற்றும் உடற்கல்வி இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார். இவருடைய கணவர் Dr.S.சுந்தரராஜன் M.A. M.P.Ed.,M.Phil.,Phd., அவர்கள் உடல்கல்வித்துறை செயலாளர் மற்றும் இயக்குநர் அண்ணாபல்கலைக்கழகம்.

**பணி விவரம் :**

தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித் துறையில் உடற்கல்வி ஆசிரியராக 1957 ஜூலை முதல் 1994 மே மாதம் வரை பணியாற்றினார். காஞ்சிபுரம் SSKV Matric பள்ளியில் உடற்கல்வி இயக்குநராக 1994 ஆகஸ்ட் முதல் 1998 மே மாதம் வரை பணியாற்றினார்.1957 ஜூலை முதல் 1998 மே மாதம் முடிய 42

ஆண்டுகள் உடற்கல்வித் துறையிலேயே தொடர்ந்து பணியாற்றிய சிறப்பினையும் பெற்றவர்.

**அரசு விருது :**

*1981 - 82 ஆண்டிற்கான - தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறை "நல்லாசிரியர் விருது" அளித்து சிறப்பு செய்தது.*

*NCC-யில் 18 ஆண்டுகள் சேவை செய்தமைக்காக Chief Officer பதவி உயர்வும் வழங்கப்பட்டது. இவரது பணிக்காலத்தில் Football and Athletics போட்டிகளில் தனி கவனம் செலுத்தி மாணவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்து மாநில மற்றும் பல்கலைக்கழக அளவில் வீரர் மற்றும் வீராங்கனைகளை உருவாக்கியுள்ளார்.*

**சமூகத் தொண்டு :**

*சமுதாய பொருளாதாரத் தொண்டு மன்றத்தில் அனைவரும் அறிந்த சுறுசுறுப்பான உறுப்பினர். அகில இந்திய வானொலி நிலைய Sport Snippet மற்றும் சன் டிவியில் "வணக்கம் தமிழகம்" நிகழ்ச்சிகளில் விளையாட்டுத் துறை சம்பந்தமாக உரையாற்றியுள்ளார். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வட்டத்திலுள்ள ஆரம்பப்பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு 1990 முதல் இன்றுவரை ஆண்டுதோறும் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடத்தி சிறார்களை ஊக்கப்படுத்தி வருபவர்.*

**சிறப்புச் சாதனை :**

*1989 முதல் மலேசியா, தென்கொரியா, ஜப்பான், தாய்லாந்து, சிங்கப்பூர் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் நடைபெற்ற ஆசிய அளவிலான மூத்தோர் தடகளப் போட்டிகளில் பங்கு கொண்டு பதக்கங்களையும், தேசிய அளவில் தமிழகம் சார்பாக அனைத்து மாநிலங்களில் நடைபெற்ற மூத்தோர் தடகளப் போட்டிகளிலும் பல பதக்கங்களையும் குவித்து வருபவர்.*

*தீராத விளையாட்டுப் பிள்ளை (80 வயது முதியவர்)*

*அவரின் சீரிய தொண்டு மேலும் பொலிவடைய வாழ்த்துக்கள் பாராட்டுக்கள்.*

## நன்றி! நன்றி! நன்றி!

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு திருவத்திபுரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற உடற்பயிற்சி ஆசிரியர், வள்ளல் **திரு.T.தேவராசன்** அவர்கள் நடப்பு மாதத்தில் கல்வி ஊக்கப் பரிசாக முதல் நிலை பெறும் ஒரு மாணவருக்கு ரூ.10,000/– வழங்கக் கூடிய வகையில் மீண்டும் **ரூ.1,20,000/-**ஐ பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர் இதற்கு முன்பாக ரூ.2,41,000/– பாவேந்தர் பாரதிதாசன் அறக்கட்டளைக்கு சென்ற மாதத்தில் வழங்கியுள்ளார். ஆக மொத்தம் **ரூ.3,61,000/-** நிதி வழங்கியுள்ள பெருமகனாருக்கு தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் நன்றிகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.




25-02-2021 வியாழக்கிழமை ஆம்பூர் கிருஷ்ணாபுரத்தில் திருப்பத்தூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத்தலைவர் **திரு. கே.சம்பத்குமார் செங்குந்தர் - திருமதி.சித்ரா** அவர்களின் மகன் **S.வசந்தகுமார் DTC., - B.ஐஸ்வர்யா B.Sc.,**



# வாழ்க எம்.பி.என். நாமம்



கைத்தறி காவலர் மெய்வழி வித்தகர்
வையகம் போற்ற வாழ்ந்த வழக்கறிஞர்
சென்னிமலை தந்த செங்குந்தர் செம்மல்
எண்ணிலும் எழுத்திலும் இவர் நிகர் எவரென
சட்டம் பயின்று பட்டம் பெற்று
தரணி போற்ற வாழ்ந்த அண்ணல்
பத்ம ஸ்ரீ எம்.பி நாச்சிமுத்து செங்குந்தர்
பத்து பத்து எட்டாண்டு பிறந்த நாளாம்
பத்திரண்டு எட்டாம் நாள் ஏப்ரல் திங்கள்
இதயத்தில் ஏந்தி வாழும் எம் மனோர் செங்குந்தர்
கிஞ்சத்தும் மறவாது கிளைகளோடு கூடி நின்று
பஞ்சத்தில் நமைக் காத்த பரமனன்ன எம்.பி. என்னை
நெஞ்சில் நினைத்து நீள் மலர்தார் சூட்டி
பணிந்து வணங்கி அவர் பாதம் சிரம் வைத்து
நிணைந்து திருவடி தொழுவோம் நீ நிலத்தில்
இணைந்து வாழ்வோம் நாமும் இனிது



பகுத்தறிவு பாசறை பாவேந்தர் பாரதி தாசன்
தொகுத்தளித்த கருத்துக்கள் சுடர்விட்டு ஒளிபரப்ப
பழமைகள் மறைந்து புதுமைகள் புகுந்தன
பாமரர் வாழ்வு பளிச்சிட பறந்தன மடமை
சீர்திருத்தவாதியாய் சிந்தனை சிற்பியாய்
பார்முழுதும் பரவிய பாரதிதாசன் பாக்கள்
எழுச்சியையும் புரட்சியையும் எளியோ நலம் காக்க
விழிப்புணர்ச்சி செய்தார் விவேகம் துளிர்த்ததம்மா
நாட்டுப்பற்று மிக்கவராய் நாடேய் புகழ்ந்ததம்மா
பற்றுக் கோடாய் கொள்வோம் பாவேந்தர் பாடல்களே

- கவிஞர் வி.எஸ்.அருணாசலம் செங்குந்தர்,
சுத்தமல்லி திருநெல்வேலி

# மணமகன் தேவை

Name : **R.SUBASHINI**
Qualification : B.Tech., MBA.,
Date of Birth : 02.07.1991, 03.05 PM at Cuddalore
Star : Sadhayam
Raasi/Lagnam : Kumbam, Thulam Lagnam - Shuddha Jadagam
Community : Sengunthar-Mudaliar
Height, Weight : 5'2", 54 Kgs



Educational Qualification:
B.Tech., SASTRA University,
MBA., Amrita University
Employment Details : Sr.Workforce Analyst, Amazon/HYD
Salary : 10 L /Annum
Father Name : A.Ramamoorthy (Business -Retail outlet - Wound up)
Mother Name : L.Jayanthi (Executive Engineer / TNEB)
Sister : Younger Sister - Unmarried (B.Com., - CMA, MBA)
Address : 62A/110 Sarong Street, Cuddalore-OT, Cuddalore District, TN - 607003
Cell : **89393 26415, 95976 70610**
Partner Preference : Well educated, open mind with good family background - Shuddha Jadagam Preferred

| | | | |
|---|---|---|---|
| | | | சூ கே |
| சந் | இராசி | | செ பு கு |
| சனி(வ) | | | சு |
| ரா | | ல | |

| | | | |
|---|---|---|---|
| செ | சு | கே | ல |
| சூ சந் சனி | நவாம்சம் | | |
| கு | | | |
| | ரா | | பு |

01/20416/ 12.02.2021

ராகு திசை இருப்பு 5 வருடம் 11 மாதம் 27 நாள்

---

பெயர் : **வெ.பிரியதர்ஷிணி**
படிப்பு : M.B.B.S.,
பிறந்த தேதி : 14.09.1996 சனிக்கிழமை காலை 6.41 மணி



நட்சத்திரம் : உத்திரம் 4ம் பாதம்
ராசி : கன்னி
உயரம் : 165 செ.மீ.,
பணி : Preparing for P.G. entrance exam
தந்தை பெயர் : மா.வெங்கடராமன், M.E., M.I.E., தலைமைப் பொறியாளர், பொ.ப.து.,
தாயார் பெயர் : வெ.கோபெருந்தேவி, B.A.,
உடன் பிறந்தோர் : அண்ணன் 1 V.லோகேஷ்வரன், B.E., M.B.A., திருமணமாகவில்லை
முகவரி : 9A, மூக்க பிள்ளை தெரு, தல்லாகுளம், மதுரை - 2
செல் : **90473 43860**
எதிர்பார்ப்பு : M.B.B.S., M.D., M.S.,
பூர்வீகம் : தல்லாகுளம், மதுரை
Reference : Thiru.R.Gandhi, Treasurer, South Indian Senguntha Mahajana Sangam
Phone : **99943 75599**

| | | | |
|---|---|---|---|
| கே சனி(வ) | | | |
| | இராசி | | செ சு |
| | | | சூ பு |
| கு | | | ல ரா சந் |

| | | | |
|---|---|---|---|
| சந் | | பு ரா | |
| | நவாம்சம் | | சனி(வ) |
| ல | | | கு(வ) |
| சூ | கே | சு | செ |

04/ 20436 / 22.02.2021

சூரிய மகாதிசை இருப்பு 0 வருடம் 3 மாதம் 3 நாள்

# மணமகன் தேவை



பெயர் : **S.சக்தி சரஸ்வதி**

பிறந்த தேதி : 14.10.1994, அதிகாலை 4 மணி, வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : திருவோணம்

ராசி : மகரம்

நிறம், உயரம் : சிவப்பு, 5'5''

படிப்பு : B.E.,

தந்தை பெயர் : S.சுகுமார் கண்ணன், M.Com., M.Ed.,
முதுகலை பட்டதாரி ஆசிரியர்
(பணி நிறைவு)
65/17, நடுத்தெரு, மதிச்சியம்,
மதுரை – 625020

தாயார் பெயர் : C.பிரேமா, DECE., உதவியாளர்,
மதுரை மாவட்ட காவல் அலுவலகம்

உடன் பிறந்தோர் : அண்ணன் 1 திருமணம் ஆனவர்
S.சக்தி கண்ணன், B.E.,
IT இன்ஜினியர், TCS., சென்னை.
D.கீர்த்தனா, B.E., MBA.,
IT., இன்ஜினியர், Tech Mahindra,
சென்னை.

சம்பந்தி முகவரி: திரு.M.தண்டபாணி, B.Com., – திருமதி.D.ராஜலட்சுமி,
Assistant Officer (Admin), NLC வட்டம் – 19,
நெய்வேலி – 607 803

செல் : **98651 28557** (அப்பா), **94981 11034** (அம்மா)

எதிர்பார்ப்பு : நன்கு படித்து பணியில் உள்ள வரன்.
நல்ல குடும்ப பின்னணி.

| | | | |
|---|---|---|---|
| | கே | | |
| சனி | இராசி | | செ |
| சந் | | | ல |
| | | ரா சு கு | சூ பு |

| | | | |
|---|---|---|---|
| | ரா | கு | பு சு |
| | நவாம்சம் | | சந் |
| | | | சூ |
| | ல | சனி கே | செ |

சந்திர திசை இருப்பு 2 வருடம் 2 மாதம் 0 நாள்

09/20448 - 27.02.2021

# மணமகன் தேவை

பெயர் : **A.அஸ்வினி**

படிப்பு : B.Tech.,

பிறந்த தேதி : 15.05.1996, தாது வருடம் வைகாசி மாதம் 2ந் தேதி புதன்கிழமை மதியம் 12.08 மணி



நட்சத்திரம் : அஸ்வினி

ராசி, லக்னம் : மேஷம், கடகம்

நிறம், உயரம் : சிவப்பு, 5'6''

பணி : விரிவுரையாளர், திருவள்ளுவர் மகளிர் அரசு மேல்நிலைப்பள்ளி, புதுச்சேரி

தந்தை பெயர் : A.அருள்மொழிச்செல்வன்

தாயார் பெயர் : A.சித்திராதேவி

உடன் பிறந்தோர் : அண்ணன் 1, தங்கை 1 இருவருக்கும் திருமணமாகவில்லை

முகவரி : பிளாட் எண் 12, பெரியநாயகி நகர், ஜான்சி நகர் அருகில், 100 அடி சாலை, ரெட்டியார்பாளையம், முதலியார்பேட்டை அஞ்சல், புதுச்சேரி - 605 004.

செல் : **94420 85635**

சொத்து விபரம் : சொந்த வீடு ஒன்று, விவசாய நிலம் உள்ளது.

| | | | |
|---|---|---|---|
| சனி கே | செ சந் | சூ பு | சு |
| | இராசி | | ல |
| | | | |
| கு | | | ரா |

| | | | |
|---|---|---|---|
| ல | | சந் | |
| | நவாம்சம் | | ரா |
| சூ கே பு | | | செ |
| | கு சு | சனி | |

07/20449/27.02.2021

கேது திசை இருப்பு 4 வருடம் 6 மாதம் 5 நாள்

பெயர் : **P.P.கவிதா**

படிப்பு : B.Sc., Home Science, Graphic Designer

பிறந்த தேதி : 03.06.1992, புதன்கிழமை காலை 9.00 மணி, ஆங்கிரச வருடம் வைகாசி மாதம் 21ம் தேதி



நட்சத்திரம் : திருவாதிரை 3ம் பாதம்

ராசி, லக்னம் : மிதுனம், கடகம்

உயரம் : 125 செ.மீ.,

பணி : OWN BUSINESS

தந்தை பெயர் : P.S.பழனி, பழனியப்பா டெக்ஸ்டைல், வியாபாரம்

தாயார் பெயர் : P.P.திரிபுரசுந்தரி

உடன் பிறந்தோர் : தம்பி 1

முகவரி : E1, Praveen Virata Apt, W-481, 2nd Avenue, Anna Nagar West Extn, Chennai - 600 101

செல் : **94444 19651, 94443 92050**

எதிர்பார்ப்பு : நல்ல குடும்பத்தை சேர்ந்தவர், நல்ல வேலையில் இருக்க வேண்டும். Any Degree

பூர்வீகம் : நகரி, ஆந்திர மாநிலம்

| | | | |
|---|---|---|---|
| செ | | சு பு சூ | சந் கே |
| | இராசி | | ல |
| சனி(வ) | | | கு மா |
| ரா | | | |

| | | | |
|---|---|---|---|
| செ | | சு | சூ ரா |
| சந் | நவாம்சம் | | ல பு கு |
| | | | சனி(வ) |
| கே | | | மா |

08/20444 - 25.02.2021

ராகு திசை இருப்பு 5 வருடம் 11 மாதம் 6 நாள்

# மணமகன் தேவை

பெயர் : **B.திவ்ய லெட்சுமி**

படிப்பு : B.E., (CSE),



பிறந்த தேதி : 31.08.1997
இரவு 12.05 மணி

நட்சத்திரம் :
ஆயில்யம் 1ம் பாதம்

ராசி, லக்னம் : கடகம்,
ரிஷபம்

நிறம், உயரம் : சிவப்பு, 170 செ.மீ.,

தந்தை பெயர் : R.பாஸ்கர்

தாயார் பெயர் : B.ஜோதி

உடன் பிறந்தோர் : மூத்த சகோதரர் (திருமணமானவர்)
B.விஜய்பாபு, B.E., Mech.,
மருமகள் : G.நிவேதா, B.E., (CSE),

முகவரி : 8/1854, செட்டித் தெரு, சத்திரம்,
கருப்பூர் - 612 501, கும்பகோணம்

செல் : **94890 53088, 94880 86022**

| | | | |
|---|---|---|---|
| சனி(வ) | | ல | |
| கே | இராசி | | சந் பு |
| கு | | | சூ ரா |
| | | செ | சு |

| | | | |
|---|---|---|---|
| செ பு | | ல கே | |
| | நவாம்சம் | | சு சூ கு |
| | | | |
| சந் சனி | ரா | | |

11/20454/05.03.2021

புதன் திசை இருப்பு 15 வருடம்

Name : **RANJANI.A. MUDALIAR**

Qualification : M.Tech., (AI & ML)

Job : Pursuing
M.Tech., Degree



Date of Birth: 06.06.1998
at 2:20 A.M.

Star : Chitrai Paadam 3

Rasi, Lagnam : Thula,
Meenam

Colour, Height : Maaniram,
152 Cms

Fathers Name : Arsu.S.Mudaliar

Mothers Name : Inbarasi.A.Mudaliar

Sibling Details : One Sister Studying in XII

Address : Block-1, Flat-3,
Marutinandan Appartments
Opposite Physical Ground,
Khokhara, Maninagar - East,
Ahmedabad - 380 008

Cell : **98985 11293** (Mother)

Preference : Well Educated and Employed in Government Sector.

Email id : arsumudaliar@rediffmail.com

| | | | |
|---|---|---|---|
| ல மா சனி கு | சு | பு செ சூ | |
| கே | இராசி | | |
| | | | ரா |
| | | சந் | |

| | | | |
|---|---|---|---|
| சனி | | செ | |
| ல | நவாம்சம் | | சூ ரா கு |
| கே | | | சு |
| | | சந் மா | பு |

18/20464/08.03.2021

செவ்வாய் திசை இருப்பு 2 வருடம் 5 மாதம் 8 நாள்

# மணமகன் தேவை

பெயர் : **P.அபர்ணா**

பிறந்த தேதி : 23.02.1991, 12.25 நள்ளிரவு வெள்ளிகிழமை

நட்சத்திரம் : ரோகிணி

ராசி, லக்னம் : ரிஷபம், விருச்சிகம்

படிப்பு : B.E., (CSE),

நிறம், உயரம் : சிவப்பு, 158 செ.மீ.,

பணி : Software Engineer

வருமானம் : 50,000/-மாதம்

தந்தை பெயர் : M.பரஞ்ஜோதி

தாயார் பெயர் : P.அறிவரசி

உடன் பிறந்தோர் : தம்பி 1

முகவரி : M.பரஞ்ஜோதி, S.P.கோயில் தெரு, விழப்பள்ளம், குறிஞ்சிப்பாடி - 607 302

உறவினர் செல் : **98949 46441 (W), 87782 17657**

எதிர்பார்ப்பு : B.E., B.Tech., M.E., M.Tech., MBA., MCA., அரசு / தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் நல்ல குணமுள்ள வரன் தேவை.

குறிப்பு : ஜாதகம் பொருத்தம் இருந்தால் மட்டும் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டில் பணிபுரியும் வரன் தேவையில்லை.

மின்னஞ்சல்: selva.si1996@gmail.com

| | | | |
|---|---|---|---|
| சு | | சந் செ | |
| சூ பு | இராசி | | கு கே |
| சனி ரா | | | |
| | ல | | |

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| | நவாம்சம் | | சந் கே |
| ரா | | | |
| சூ | பு | கு | ல சு |

20/20466/08.03.2021

சந்திர திசை இருப்பு 1 வருடம் 10 மாதம் 15 நாள்

பெயர் : **Dr.த.ரமா,** M.V.Sc., Ph.D., Professor, அரசு கால்நடை மருத்துவக் கல்லூரி, உடுமலைப்பேட்டை



பிறந்த தேதி : 11.11.1990, பிரமோதூத வருடம் ஐப்பசி மாதம் 25, ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மணி 2 நிமிடம் 9 ஜனன நாழிகை 20.00

நட்சத்திரம் : பூரம்

ராசி, லக்னம் : சிம்மம், கும்பம்

நிறம், உயரம், எடை : சிகப்பு, 165 செ.மீ., 52 கிலோ

இனம் : செங்குந்த முதலியார் (கைக்கோளர்)

தந்தை பெயர் : வி.தங்கராசு, செங்குந்தர் M.Com., நெசவு மற்றும் விவசாய வேலை

தாயார் பெயர் : த.சீதா, வீட்டு வேலை

உடன் பிறந்தோர் : சகோதரிகள் - 2 சகோதரர்கள் - 3 திருமணமானவர்கள்

முகவரி : க.எண். 6/39, 4வது தெரு, செங்குந்தபுரம் அஞ்சல், ஜெயங்கொண்டம், உடையார்பாளையம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் - 621 802

தொடர்புக்கு: 1. அண்ணன் த.ஸ்டாலின் வழக்கறிஞர் செல் : **94435 60937,** (க.எண்:20 ஸ்டேட் பேங்க் காலனி, JKM - 621 802.)
2. தந்தை வி.தங்கராசு செல் : **96882 42884, 97156 10447** (W), **63803 28767**

எதிர்பார்ப்பு : அரசு வேலையில் உள்ள சமபடிப்புள்ள கால்நடை மருத்துவ துறை சார்ந்த கௌரவமான குடும்ப பின்னணியுடன் கூடிய நல்லொழுக்கம் உள்ள இதே இன மணமகன் மட்டும் தேவை.

| | | | |
|---|---|---|---|
| | | செ | |
| ல | இராசி | | கு கே |
| ரா | | | சந் |
| சனி | பு | சூ | |

| | | | |
|---|---|---|---|
| ரா | | ல சூ செ சு | |
| | நவாம்சம் | | |
| கு | | | சந் |
| | பு சனி | | கே |

21/20467/08.03.2021

சுக்ர திசை இருப்பு 18 வருடம் 03 மாதம் 24 நாள்

# மணமகன் தேவை

Name : **P.UMA MAHESHWARI**
Qualification : B.E., (EEE),
Date of Birth : 17.09.1997,
Wednesday, Chennai



Star : Uthirattathi
Rasi, Lagnam : Meenam,
Thanusu
Compelxion, Height:
சிவப்பு, 5'6''
Gothiram : Siva Gothiram
Job : Systems Engineer,
Info System, Chengalpattu
Income : 35.000/-PM
Fathers Name : K.Paneerselvam, B.E., (Late),
Mothers Name : M.Muthulakshmi, M.Sc., B.Ed.,
PGT Kendriya Vidyalaya, Palghat
Sibling Details : Only Daughter
Grand Father (தாய்வழி) : M.Madappan, B.E.,
I.O.F.S., (Retd), Addl.General Manager,
Ordinance Factory ITARSI, Min of Defence,
Address : 5/9, Sangam Street, Sundarapuram,
Coimbatore - 641 024
Cell : **95004 62595, 90033 59568**
Assets Details : Three Floor தனி வீடு 1,
Sundarapuram
Expectation : B.E., M.E., தனியார் துறை
அல்லது அரசாங்க நிரந்தர பணி

| | | | |
|---|---|---|---|
| சந் சனி | | | |
| கே | இராசி | | |
| கு | | | ரா பு |
| ல | மா | சு செ | சூ |

| | | | |
|---|---|---|---|
| | | கே | செ கு |
| சனி | நவாம்சம் | | பு |
| சு சூ மா | | | ல |
| | ரா | | சந் |

22/20468/08.03.2021

சனி திசை இருப்பு 11 வருடம் 7 மாதம் 20 நாள்

பெயர் : **இரா.இலக்கியா**
பிறந்த தேதி : 24.02.1998
(மாலை 6.18 மணி) ஈஸ்வர
வருடம் மாசி மாதம் 12ஆம்
நாள் செவ்வாய்கிழமை



நட்சத்திரம் : திருவோணம்
1ம் பாதம்
ராசி, லக்னம் : மகரம், சிம்மம்
படிப்பு : B.E., (EEE),
நிறம், உயரம், எடை : மாநிறம், 160 செ.மீ., 60 கிலோ
தந்தை பெயர் : நா.இராதாகிருஷ்ணன்
(சரவணா மளிகை)
தாயார் பெயர் : இரா.பானுமதி
உடன் பிறந்தோர் : அக்கா 1 திருமணமானவர்,
ரா.வினோதினி, B.Tech.,
மருமகன் சி.சிவா, M.Sc., B.Ed., M.Phil.,
(தலைமையாசிரியர்)
தம்பி 1 இரா.கார்த்திக்ராஜா B.E.,
முகவரி : 1-24, காளியம்மன் கோவில் தெரு,
மீன்சுருட்டி - 612 903
தொடர்பு முகவரி : சரவணா மளிகை, மீன்சுருட்டி
செல் : **98423 89213, 63826 86886**
எதிர்பார்ப்பு : M.E., M.S., B.E.,
(நல்ல பணியில் உள்ள வரன்)

| | | | |
|---|---|---|---|
| சனி செ | | | |
| சூ கு பு கே | இராசி | | |
| சந் சு | | | ல ரா |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | சந் பு | | |
| கே | நவாம்சம் | | ல செ |
| சூ சு கு | | | ரா |
| சனி | | | |

24/20469/08.03.2021

சந்திர திசை இருப்பு 7 வருடம் 9 மாதம் 10 நாள்

# மணமகன் தேவை

பெயர் : **மா.சந்தோஷி**
படிப்பு : B.Tech., (Bio-Technology),
பிறந்த தேதி : 24.03.1995, வெள்ளிக்கிழமை 5.54 PM
நட்சத்திரம் : பூராடம்
ராசி, லக்னம் : தனுசு, கன்னி



நிறம், உயரம், எடை : மாநிறம், 5'1", 51 கிலோ (Slim)
பணி : Non IT, Chennai
வருமானம் : 58,000/- மாதம் (Take home)
தந்தை பெயர் : V.மாதேஷ்வரன், B.E., Own Business (Having Own Factory)
தாயார் பெயர் : V.மணிமேகலை, B.Sc., இல்லத்தரசி
முகவரி : Madeswaran, Hosur, Tamilnadu
செல் : மாதேஷ்வரன் **98423 99296**, மணிமேகலை **93677 99900**
உடன் பிறந்தோர் : யாரும் இல்லை
சொத்து விபரம் : 2 கோடி (No debts)
குறிப்பு : ராகு, கேது உள்ளது
எதிர்பார்ப்பு : B.E., B.Tech., or M.E., M.Tech., M.S., சென்னையில் வேலை, வயது 30க்குள் இருக்க வேண்டும். உணவு முறை அசைவம்.

| | | | |
|---|---|---|---|
| சூ | கே மா | | |
| பு சு சனி | இராசி | | செ |
| | | | |
| சந் | கு | ரா | ல |

| | | | |
|---|---|---|---|
| | பு | சனி | |
| ரா | நவாம்சம் | | கே |
| ல கு | | | |
| செ | | சு மா | சந் சூ |

சுக்ர திசை இருப்பு 12 வருடம் 5 மாதம் 5 நாள்

27/20474/

பெயர் : **S.கலைவாணி**
பிறந்த தேதி : 12.10.1986, அட்சய வருடம், புரட்டாசி மாதம் 26ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 11.39 மணி
நட்சத்திரம் : திருவோணம் 2ம் பாதம்
ராசி, லக்னம் : மகரம், தனுசு
நிறம், உயரம் : சிகப்பு, 151 செ.மீ.,



பிறப்பு வரிசை: முதலாவது
படிப்பு : B.Sc.(Mathematics), MCA.,
பணி : TCS, Chennai (தற்சமயம் அமெரிக்காவில் பணிபுரிகிறார். - H1B (I140), USA) (தற்சமயம் இந்தியா வந்துள்ளார்) State : PA
வருமானம் : 3,00,000/-மாதம்
தந்தை பெயர் : T.சண்முகசுந்தரம், கனரா வங்கி, NNND Agent, ஜெயங்கொண்டம்
தாயார் பெயர் : S.சுலோச்சனா, இல்லத்தரசி
மின்னஞ்சல்: shanmugasundaramsulochana@gmail.com
உடன் பிறந்தோர் : தம்பி S.சுபானந்தன், B.Tech., Executive Assistant, SIPCOT, Egmore, Chennai
தங்கை S.அபிநயா, B.E., PGDB., Manager, Branch Banking, Axis Bank, Chennai
செல் : **93441 65147, 99423 37309, 96884 23018, 81486 86829 (W)**
எதிர்பார்ப்பு : B.E., MCA., படித்து Software பணியில் உள்ள நல்ல குடும்ப பின்னணி உள்ள வரன்.
முகவரி : 50A1, ஜோதிபுரம் தெரு, சிதம்பரம் ரோடு, ஜெயங்கொண்டம் - 621 802, அரியலூர் மாவட்டம்

| | | | |
|---|---|---|---|
| ரா | | | |
| கு | இராசி | | |
| சந் செ | | | |
| ல | சனி சு | பு | சூ கே |

| | | | |
|---|---|---|---|
| பு | கு | சந் செ | |
| ரா | நவாம்சம் | | சு |
| | | | ல சூ கே |
| | | | சனி |

சந்திர திசை இருப்பு 5 வருடம் 11 மாதம் 24 நாள்

31/20481/12.03.2021

# மணமகன் தேவை

பெயர் : **S.திலகவதி**

பிறந்த தேதி : 31.12.1991, செவ்வாய்க்கிழமை மதியம் 2.20 மணியளவில் மார்கழி மாதம் 16ஆம் தேதி



நட்சத்திரம் : விசாகம்

ராசி, லக்னம் : துலாம், மேஷம்

படிப்பு : B.Com., B.Ed., MBA.,

தந்தை பெயர் : A.சுப்பரமணியன், (வியாபாரம்)

தாயார் பெயர் : S.பூங்கொடி

உடன் பிறந்தோர் : அக்கா 1 திருமணமானவர், தங்கை 1 திருமணமாகவில்லை

முகவரி : எண் : 22, கோவிந்தன் வீதி, ஆனந்தா நகர், கதிர்காமம், புதுச்சேரி - 605 009

செல் : **94431 10828**

| | | | |
|---|---|---|---|
| | ல | | கே |
| | இராசி | | |
| சனி | | | கு |
| சூ ரா | செ பு சு | சந் | |

| | | | |
|---|---|---|---|
| செ | சந் | | |
| பு கே சனி | நவாம்சம் | | |
| | | | சூ ரா சு |
| | ல | கு | |

33/20485/

குரு மகா திசை இருப்பு 12 வருடம் 9 மாதம் 20 நாள்

---

பெயர் : **T.கௌசல்யா** (மறுமணம்)

பிறந்த தேதி : 05.10.1988, 5.10 A.M. விபவ வருடம் புரட்டாசி மாதம் 18ம் தேதி, செவ்வாய்க்கிழமை,சேலம்



படிப்பு : M.Sc., B.Ed., (Maths),

நட்சத்திரம் : பூசம் 4ம் பாதம்

ராசி, லக்னம் : கடகம், கன்னி

கோத்திரம் : சிவ கோத்திரம்

நிறம், உயரம் : மாநிறம், 5'5"

தந்தை பெயர் : R.திருநாவுக்கரசு, நூல் வியாபாரம்

தாயார் பெயர் : T.ஜோதி

சொந்த ஊர் : சேலம், ஆட்டையாம்பட்டி

உடன் பிறந்தோர் : அக்கா 1, தங்கை 1 இருவரும் திருமணமானவர்கள்

சொத்து விபரம் : மாடி வீடு (மதிப்பு 1 கோடி) மனைநிலம் 2 (மதிப்பு 50 இலட்சம்)

எதிர்பார்ப்பு : நல்ல படித்த, வேலையிலுள்ள, நல்ல குடும்ப பின்னணி உள்ள வரன்.

முகவரி : 3/208, N.S.K.தெரு, S.பாப்பாரப்பட்டி (PO), (வழி) ஆட்டையாம்பட்டி, சேலம் (Dt) - 637 501

செல் : **91500 98386, 88257 25650**

| | | | |
|---|---|---|---|
| செ(வ) | மா | கு(வ) | |
| ரா | இராசி | | சந் |
| | | | கே சு |
| சனி | | பு(வ) | ல சூ |

| | | | |
|---|---|---|---|
| ரா | கு(வ) | சனி | சு சூ |
| ல | நவாம்சம் | | |
| | | | மா |
| | சந் | பு(வ) | கே செ(வ) |

34/20486/

சனி திசை இருப்பு 3 வருடம் 9 மாதம் 15 நாள்

# மணமகன் தேவை

பெயர் : **S.பிரீத்தி**
படிப்பு : B.E., (CSE),
பிறந்த தேதி : 03.06.1996, திங்கள் 11.55 P.M. தாது வருடம் வைகாசி 21ம் தேதி



நட்சத்திரம் : பூராடம்
ராசி, லக்னம் : தனுசு, கும்பம்
நிறம், உயரம் : மாநிறம், 164 செ.மீ.,
பணி : Software Development Analyst, NTT Data (MNC), Bangalore
வருமானம் : 5,20,000/- வருடம்
தந்தை பெயர் : R.சிவகுமார், B.E., Dy.General Manager, HAL, Bangalore
தாயார் பெயர் : S.சுதா, B.Sc., இல்லத்தரசி
பூர்வீகம் : ஜெயங்கொண்டம், அரியலூர் (Dt.)
உடன் பிறந்தோர் : சகோதரர் Doing B.E., (CSE),
முகவரி : No:38, 3rd Main, 3rd Cross L.B.S.Nagar, Hal, Bangalore - 17
செல் : **94801 27442, 97410 03975**
எதிர்பார்ப்பு : படித்த, நல்ல பணியில் உள்ள வரன்.
மின்னஞ்சல் : rsivahal@gmail.com

| | | | |
|---|---|---|---|
| சனி கே | செ பு | சூ | சு |
| ல | இராசி | | |
| | | | |
| சந் கு | | | ரா |

| | | | |
|---|---|---|---|
| | | | சூ செ ரா |
| | நவாம்சம் | | சனி |
| ல சு | | | சந் |
| பு கே | கு | | |

35/20490/16.03.2021

சுக்ர திசை இருப்பு 18 வருடம் 3 மாதம் 25 நாள்

பெயர் : **G.தேன்மொழி (எ) மோனிஷா**
பிறந்த தேதி : 10.09.1994, பவ வருடம் ஆவணி 25ஆம் தேதி சனிக்கிழமை காலை 11.09 மணி



நட்சத்திரம் : விசாகம்
ராசி, லக்னம் : துலாம், விருச்சிகம்
நிறம், உயரம் : சிவப்பு, 150 செ.மீ.,
படிப்பு : B.E., (ECE),
பணி : Working in Fidelity Investment Chennai
வருமானம் : 9,00,000/- Annual Income
தந்தை பெயர் : M.கணேசன் (வியாபாரம்)
தாயார் பெயர் : G.செல்வி, இல்லத்தரசி
உடன் பிறந்தோர் : G.சோபியா, B.Tech., Chemical Engg, (Working in TVS Sri Chakra in Madurai)
முகவரி : M.கணேசன், 15A, மருதை சந்து, துறையூர் - 621 010, திருச்சி மாவட்டம்
செல் : **98653 84576**

| | | | |
|---|---|---|---|
| | கே | | செ |
| சனி | இராசி | | |
| | | | சூ |
| | ல | சு கு சந் ரா | பு |

| | | | |
|---|---|---|---|
| கு | சந் செ ரா | | பு |
| | நவாம்சம் | | |
| | | | |
| சு | சனி | ல கே சூ | |

28/20477/10.03.2021

குரு திசை இருப்பு 14 வருடம் 4 மாதம் 6 நாள்

# மணமகன் தேவை

பெயர் : **A.வினோதினி**
படிப்பு : B.E., (EEE),



பிறந்த தேதி : 25.02.1995,
சனிக்கிழமை காலை
10.17 மணி, பவ வருடம்
மாசி மாதம் 13ம் தேதி,
திருவாரூர் வயது: 26
நட்சத்திரம்: பூராடம் 2ம் பாதம்
ராசி, லக்னம் : தனுசு, மேஷம்
குறிப்பு : ராகு, கேது
தோஷம் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது
நிறம், உயரம், எடை : வெள்ளை, 165 செ.மீ., 69 கிலோ
பணி : Team Leader, Wipro IT Company
வருமானம் : 5 to 6 Lakh/Year (45-50K/Month)
தந்தை பெயர் : P.அருள், M.E., AEE (Retd),
TWAD Board
பூர்வீகம் : தேவூர், திருவாரூர்
தாயார் பெயர் : A.அமுதா
உடன் பிறந்தோர் : அக்கா 2 பேர் இருவரும்
திருமணமானவர்கள் பிறப்பு வரிசை: 3வது
முகவரி : 3/189, GRT நகர், திருவாரூர் - 610 001
செல் : **94435 26425**
எதிர்பார்ப்பு : வயது 26 லிருந்து 31க்குள் இருக்க வேண்டும். உயரம் 165 - 175 செ.மீ., இருக்க வேண்டும். நிறத்தில் எதிர்பார்ப்பில்லை. B.E., M.E., M.Tech., IT, Bank, Governtment Job ஆக இருக்கலாம். உணவுப் பழக்கம் சைவம் அல்லது அசைவமாக இருக்கலாம். வெளிநாட்டில் வாழ இசைவு.

| | | | |
|---|---|---|---|
| | ல / கே | | |
| சூ சனி | இராசி | | செ |
| பு | | | |
| சந் சு | கு | ரா | |

| | | | |
|---|---|---|---|
| | | | பு |
| ரா | நவாம்சம் | | |
| சூ கு செ சனி | | | கே |
| சு | | | ல / சந் |

41/20503/20.03.2021

சுக்ர திசை இருப்பு 14 வருடம் 2 மாதம் 15 நாள்

பெயர் : **T.அர்ச்சனா**
படிப்பு : B.Sc., (CS), MBA., (HR),



பிறந்த தேதி : தாது வருடம்
சித்திரை மாதம்
28 புதன்கிழமை 08.05.1996,
1.32 P.M. சென்னை
நட்சத்திரம் : உத்திராடம்
1ம் பாதம்
ராசி, லக்னம் : தனுசு, சிம்மம்
நிறம், உயரம், எடை :
மாநிறம், 154செ.மீ., 60 கிலோ
பிறப்பு வரிசை: 2வது
தந்தை பெயர் : R.திருநாவுக்கரசு, மருந்தகம்
பூர்வீகம் : ஊத்தங்கரை
தாயார் பெயர் : காஞ்சனா, இல்லத்தரசி
பூர்வீகம் : சென்னை
முகவரி : 60C, கல்லாவி ரோடு,
ஊத்தங்கரை (PO) - 635 207,
ஊத்தங்கரை (TK), கிருஷ்ணகிரி (DT),
செல் : **81249 94003**
உணவு வழக்கம் : சைவம் / அசைவம்
உடன் பிறந்தோர் : சகோதரர் 1
சொத்து விபரம் : சொந்த வீடு உள்ளது 1 கோடி, வீட்டு மனை, நிலம் உள்ளது.
எதிர்பார்ப்பு : Any Degree, படித்து பணியில் உள்ள (அ) சொந்த தொழில் இருந்தாலும் சரி

| | | | |
|---|---|---|---|
| கே சனி | சூ செ | பு | சு |
| | இராசி | | |
| | | | ல / |
| கு சந் | | | ரா |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| பு | நவாம்சம் | | செ ரா |
| கே | | | ல / |
| சந் | கு சூ | சு | சனி |

42/20505/22.03.2021

சூரிய திசை இருப்பு 4 வருடம் 10 மாதம் 26 நாள்



# மரவள்ளிக்கிழங்கு பாயசம்




**தேவையானவை:**

| | |
|---|---|
| மரவள்ளிக்கிழங்கு | - கால் கிலோ |
| சர்க்கரை | - ஒரு கப் |
| பால் | - 3 கப் |
| தேங்காய்ப் பால் | - ஒரு கப். |

முந்திரி (நெய்யில் வறுத்தது - 10

ஏலக்காய்த்தூள், குங்குமப்பூ - தலா ஒரு சிட்டிகை

**செய்முறை:**

மரவள்ளிக்கிழங்கை நன்றாகக் கழுவி, வேகவைத்து தோலை நீக்கி மசித்துக் கொள்ளவும். பாலுடன் சர்க்கரை சேர்த்துக் கொதிக்கவிடவும். அதில் மசித்த மரவள்ளிக்கிழங்கை சேர்த்து நன்கு கிளறவும். பிறகு, முந்திரி, ஏலக்காய்த்தூள், குங்குமப்பூ சேர்த்து இறக்கிய பிறகு, தேங்காய்ப் பால் சேர்க்கவும். சுவையான மரவள்ளிக் கிழங்கு பாயாசம் தயார்.

# மூலிகை தேநீர்

**தேவையானவை:**

| | |
|---|---|
| இஞ்சி | - 1 கப் |
| கிராம்பு, பட்டை | - 10 |
| அன்னாசிப்பூ | - 5 |
| ஏலக்காய் | - 5 கிராம் |
| துளசி | - ஒரு கைப்பிடி |
| மிளகு | - 5 கிராம் |
| அதிமதுரம் | - 2 ஸ்பூன் அளவு |
| அஸ்வகந்தா | - 1/4 ஸ்பூன் |

**செய்முறை:**

இஞ்சியை தோல் சீவி தண்ணீரில் நன்றாக அலசி எடுத்து, சிறு சிறு துண்டுகளாக்கி தண்ணீர் உலரும் வரை அதை வெயிலில் காய வைக்கவும்.

துளசியை தண்ணீரில் அலசி அதையும் நன்றாக வெயிலில் உலரவைக்கவும். பின்னர் அடுப்பில் வாணலியை வைத்து அதில் மிளகு மற்றும் ஏலக்காயை வறுத்து கொள்ளவும்.



அடுத்து வெயிலில் உலர்ந்த இஞ்சி, பட்டை, கிராம்பு, அன்னாசிப்பூ ஆகிவற்றை சேர்த்து வறுக்க வேண்டும். வறுத்த கலவையை ஆறவைத்து மிக்சியில் பொடியாக அரைக்கவும்.

அரைத்த பொடியுடன் அதிமதுரம் மற்றும் அஸ்வகந்தா பொடிகளை சேர்த்து நன்றாக கலந்து டப்பாவில் போட்டு வைத்துக் கொள்ளவும்.

இந்த மூலிகைக் கலவையில் சிறிது எடுத்து நீரில் கொதிக்கவைத்தோ அல்லது தேநீருடன் கலந்தோ குடித்து வர நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

# யாளி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.,

# YALEY CHITFUNDS (P) LTD.,

GSTIN : 33AAACY0719M2Z9

Since 1986

மத்திய மாநில அரசுகளின் சீட்டு நிதிச் சட்டப்படி பதிவு பெற்ற சீட்டுகள் நடத்தும் நிறுவனம்



தெய்வத்திரு
Dr. Lion.யாளி S.மதிவாணன்
நிறுவனர்

223, எழில் இல்லம், மேட்டூர் ரோடு, ஈரோடு – 638 011.

Ph : 0424 - 2259007, 4020258 94431 28386 / Email : yaleychitfunds@gmail.com

## எமது பெருமை மிகு சீட்டு குருப்புகள்

| மாதத் தவணை | மாதங்கள் | சீட்டு தொகை |
|---|---|---|
| ₹. 2,00,000 | 25 | ₹. 50,00,000 |
| ₹. 1,00,000 | 25 | ₹. 25,00,000 |
| ₹. 50,000 | 25 | ₹. 12,50,000 |
| ₹. 50,000 | 40 | ₹. 20,00,000 |
| ₹. 25,000 | 40 | ₹. 10,00,000 |
| ₹. 30,000 | 40 | ₹. 12,00,000 |
| ₹. 15,000 | 40 | ₹. 6,00,000 |
| ₹. 20,000 | 30 | ₹. 6,00,000 |
| ₹. 10,000 | 30 | ₹. 3,00,000 |
| ₹. 20,000 | 25 | ₹. 5,00,000 |
| ₹. 10,000 | 25 | ₹. 2,50,000 |
| ₹. 8,000 | 25 | ₹. 2,00,000 |
| ₹. 4,000 | 25 | ₹. 1,00,000 |

**JC பிரேம்சரண் மதிவாணன்**
நிர்வாக இயக்குநர்
**94433 28386**

**புதிய சீட்டில் இணைய தொடர்புக்கு**

**94433 28701 | 94432 28731 | 94877 28386**

**தினசரி, வார மற்றும் மாத கலெக்ஷன்கள் உண்டு**



நாமக்கல் மாவட்டம் மணியனூர் கிராமம் கந்தம்பாளையம் செங்குந்த முதலியார் சமூகத்தாருக்கு உட்பட்ட அருள்மிகு முத்துக்குமார சுவாமி திருக்கோயில் திருகுடமுழுக்கு விழாவிற்கு 24.02/2021 புதன்கிழமை அன்று வருகை தந்த தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் கைத்தறிக் கதிரவன் திரு K.P.K செல்வராஜ் அவர்களிடம் செங்குந்தமித்திரன் வளர்ச்சி நிதியாக ரூபாய் 5000 கந்தம்பாளையம் செங்குந்தர் இளைஞர் பேரவை சார்பாக வழங்கப்பட்டது. தெ.செ.ம.சங்கத்தின் துணைத் தலைவரும், மாவட்டத் தலைவருமான ஆ.பாலதண்டபாணி, மாவட்டப் பொருளாளர் S.சுந்தர் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.


## செங்குந்த மித்திரனில் விளம்பரம் செய்யுங்கள்!

**உங்கள் இல்லத் திருமண விழா, காதணி விழா, புதுமனை புகுவிழா, பிறந்த நாள் விழா போன்ற சுபநிகழ்ச்சிகளை செங்குந்த மித்திரன் இதழில் விளம்பரமாக வெளியிடலாம்.**

| | |
|---|---|
| அரைப்பக்கம் (கலர்) (140mm X 100mm) | – ரூ. 2,500 |
| முழுப்பக்கம் (கலர்) (140mm X 200mm) | – ரூ. 5,000 |
| கண்ணீர் அஞ்சலி முழுப்பக்கம் (B&W) | – ரூ. 3,500 |



**மேலும் விபரங்களுக்கு தலைமைச் சங்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.**



15-04-2021

# 81-ஆவது அகவை பிறந்த நாள் வாழ்த்துக்கள்...



33 வருடம் 10 மாதங்கள் தலைமை ஆசிரியராகவே பணியாற்றி தனது 81-ஆவது அகவையில் அடி எடுத்து வைக்கும் நல்லாசிரியர் திரு.**L.T.மோகன் செங்குந்தர்** தலைமை ஆசிரியர்(ஓய்வு) அவர்கள், தன் அயராது உழைப்பால் கல்விப் பணியும், சமுதாயப் பணியும் சிறப்பாக ஆற்றியமைக்காக நல்லாசிரியர் விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் அண்ணா விருது பெற்றார். அவருடைய தன்னலமற்ற தொண்டுள்ளத்தை பாராட்டி தமிழக அரசு 1998 ஆம் ஆண்டு ஆசிரியர் தினத்தன்று அவரை பாராட்டி கீழ்கண்டவாறு நற்சான்று வழங்கியுள்ளது.

நல்ல தலைமை ஆசிரியர், பள்ளி வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருபவர், தம்முடைய பாடத்தில் 100 தேர்ச்சி விழுக்காட்டை காட்டி வருபவர், சிறந்த பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் கொண்டவர், பணியிடைப் பயிற்சிகள் பணிமனைகள் பலவற்றில் பங்கு பெற்றவர், பள்ளி முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு வருபவர். நல்லொழுக்கச் சீலர் எனறு நற்சான்று வழங்கி பாராட்டியது.

இவ்வளவு சிறப்பு பெற்ற இவரின் 81-ஆவது அகவை பிறந்த நாளில் எல்லா நலமும், வளமும், பெற்று மேலும் மேலும் அவர் பணித்தொடர சீரும், சிறப்புடன் நீடுழி வாழ வாழ்க வாழ்க என செந்தூர் வேலனை வேண்டி வாழ்த்துகிறோம்.

தற்பொழுது ஆம்பூர் வட்ட ஆசிரியர் அரசு ஊழியர் ஓய்வு பெற்றோர் சங்க தலைவராகவும், வேலூர் மாவட்ட வாரியார் கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளையின் வள்ளலாகவும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க மாநில செயற்குழு உறுப்பினராகவும், பணியாற்றி வரும் உங்கள் பணி சிறக்க எங்களுடைய நல்வாழ்த்துக்களையும், வணக்கங்களையும், தெரிவித்துக் கொள்கிறோம்.



K.சம்பத்குமார்
தலைவர்

N.மாணிக்கவாசகம்
செயலாளர்

K.ஜெயபிரகாஷ்
பொருளாளர்

M.தங்கவேல்
செயற்குழு உறுப்பினர்

S.ரவிச்சந்திரன்
செயற்குழு உறுப்பினர்

**திருப்பத்தூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கம்**
**வேலூர் மாவட்ட வாரியார் கல்வி/மருத்துவ அறக்கட்டளை**

# உங்கள் பக்கம்

அன்பும், பண்பும், ஆன்மீகமும், வீரமும், விவேகமும் நிறைந்த செங்குந்த சொந்தங்களுக்கு, வணக்கம்.

*வாழ்க்கையைப் போலத்தான் அரசியலும்*
*பல எதிர்பார்ப்புகளைக் கொடுத்து ஏமாற்றுவதில்....*

ஒன்றுக்கொன்று பெரிய வித்தியாசமில்லை. ஜாதி அரசியல் இல்லை, மத அரசியல் இல்லை இல்லை என்று பொய் பேசியே காலத்தை ஓட்டியவர்கள் அரசியல்வாதிகள். இன்றளவும் அது தொடர்ந்து வெற்றிநடை போடுகிறது.

நாம் ஆரம்பித்த கட்சி, சார்ந்த கட்சிகளில் எல்லாவற்றிலும் நமது சொந்தங்கள் ஓரங்கட்டப்படுகின்றனர் - ஓரங்கட்டியும் விட்டார்கள். இனி எங்கே செல்வது.

நமக்கென்று ஒரு கட்சி ஆரம்பிக்கலாம் என்று தொடங்கியபொழுது, பல கட்சி சார்ந்தவர்கள் நாங்கள் எத்தனை ஆண்டுகளாக அந்தக் கட்சிகளில் இருக்கிறோம், வாக்கு வங்கியின் அடிப்படையல் செங்குந்தர்கள் அதிகம் வாழும் தொகுதிகளில் செங்குந்தர்களை வேட்பாளர்களாக அறிவிப்பார்கள் என்று இலவு காத்த கிளி போல் நம்மவர்கள் காத்துக் கொண்டிருந்தார்கள். மேலும் நம்மையும் கட்சி ஆரம்பிக்க வேண்டாம் என்று அப்போது தடுத்தும் விட்டார்கள். ஜாதி அடிப்படையில் நாமும் நம் சொந்தங்களுக்கு பல கட்சிகளில் சிபாரிசும் செய்திருந்தோம்.

ஆனால், அனைத்து கட்சிகளும் நம்மவர்களையும், அவர்களை நம்பிய நம்மையும் நன்றாக ஏமாற்றி விட்டார்கள். தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் 234ல், நடைபெறுகின்ற தேர்தலில் பிரதான கட்சிகள் தலா 2 செங்குந்த வேட்பாளர்களுக்கு மட்டும் போட்டியிடுவதற்கு வாய்ப்புக் கொடுத்துள்ளார்கள்.

வாய்ப்பு மறுக்கப்பட்டவர்களிடமிருந்து வந்த அழுத்தத்தால், நமது சமுதாயம் மேன்மையடைய 'தமிழ் மாநில கட்சி' என்ற பெயரில் ஓர் அரசியல் கட்சி குறுகிய காலத்தில் தொடங்கப்பட்டது. இதற்கு, தமிழகம் முழுவதிலுமிருந்து நம் சொந்தங்கள் மட்டுமின்றி பிற சமுதாயத்தினரும் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் வழங்கினர். அவர்களுக்கு நன்றிகள். தமிழ் மாநில கட்சி சார்பாக வேட்பாளர்கள்




ஆவதற்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டபோது, உள்ளூரில் அரசியல் செய்பவர்கள் அதைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள். நமக்கு நாமே இப்படி செய்து கொண்டிருந்தால் எப்படி அரசியலில் நுழைய முடியும்?

காலம் காலமாக நம்மைப்பற்றி பிறர் சொல்வதை நாம் ஒரு சிறிதளவுகூட மாற்றாமல் அப்படியே சொல்வதற்கு வாய்ப்புகள் கொடுத்துக் கொண்டேயிருக்கின்றோம்.

குறுகிய கால சூழ்நிலையில் நமது கட்சியின் சின்னத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்கு கால அவகாசம் போதுமானதாக இல்லாததால் இந்த சட்டமன்றத் தேர்தலில், நம்முடைய சங்கம் ஏற்கனவே தீர்மானித்தபடி செங்குந்த சொந்தங்கள் வேட்பாளராக எந்தக் கட்சியின் சார்பாகவோ அல்லது சுயேட்சையாகவோ எங்கு போட்டியிட்டாலும் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறேன்.

வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடுவதற்கு தயார் செய்து கொள்ளுங்கள். வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளது.

*தூங்கும் புலியைப் பறை கொண்டெழுப்பினோம்*
*தூய தமிழரைத் தமிழ் கொண்டெழுப்பினோம்*
*தீங்குறு பகைவரை இவனின்றி நீக்குவோம்*
*செந்தமிழ் உணர்ச்சி வேல் கொண்டு தாக்குவோம்..!*

மீண்டும் சந்திப்போம்
பிரியமுடன்...

KPK செல்வராஜ்



# சத்துக்கள் வீணாகாமல் உணவுப் பொருட்களை எப்படி சாப்பிட வேண்டும்?

நாம் சில காய், கனிகளை சாறு எடுத்து பருகுகிறோம். சிலவற்றை அப்படியே பச்சையாக சாப்பிடுகிறோம். பாதி வேகவைத்தும் சாப்பிடுவோம். முழுமையாக வேகவைத்தும் சிலவற்றை சாப்பிடுவோம்!

இப்படி வித்தியாசமான முறைகளில் நாம் உணவுப் பொருட்களை சாப்பிட என்ன காரணம்?

ஒவ்வொரு உணவுப் பொருளிலும் இருக்கும் சத்துக்களை முழுமையாகப் பெறவேண்டும் என்றால், அதற்கு ஏற்றபடி சாப்பிட வேண்டியதிருக்கிறது.

உதாரணத்திற்கு முட்டையை நன்கு வேகவைத்து சாப்பிட்டால்தான், அது முழுமையாக ஜீரணமாகி, சத்துக்கள் எல்லாம் உடலில் சேரும். முட்டையை வேகவைக்காமல் பச்சையாக சாப்பிட்டால் சரியாக ஜீரணமாகாது. சத்துக்களும் உடலில் முழுமையாக சேராது.

பச்சைக் காய்கறிகள், கீரைகள், பருப்பு வகைகளை சமைக்கும்போது, அதிலுள்ள சில சத்துக்கள் வெளியேறி, வீணாகிவிடுகின்றன. குறிப்பாக நீரில் கரையக் கூடிய வைட்டமின்களாகிய *(Water Soluble Vitamins)* வைட்டமின் *'C'* மற்றும் *'B* வைட்டமின்கள் (தயமின், ரைபோப்ளேவின், நியாசின், பேன்டொதெனிக் அமிலம், பிரிடாக்ஸின், போலிக் அமிலம், கொபாலமின்), கொழுப்பில் கரையக்கூடிய வைட்டமின்களாகிய வைட்டமின் A, D, E, K, பொட்டாசியம், மக்னீசியம், சோடியம், கால்சியம் ஆகியவை சமைக்கும்போது உணவுப் பொருட்களை விட்டு வெளியேறிவிடுகிறது.

நாம் பெரும்பாலான உணவுகளை தண்ணீர் சேர்த்து சமைக்கிறோம். அந்த தண்ணீர் சூடாகும் அளவைப் பொறுத்து, அந்த உணவுப்பொருட்களிலுள்ள சத்துக்கள்


வெளியேறுகிறதா, இல்லையா என்பது தெரியவரும். இளஞ்சூடு (Poaching), காய்ச்சுவது (Simmering), கொதிக்க வைப்பது (Boiling) இந்த மூன்றிலும் தண்ணீர் சுடும் அளவு மாறுபடும்.

காய்கறிகள் மூலம்தான் நமது உடலுக்கு தேவையான வைட்டமின் 'C' சத்து அதிக அளவில் கிடைக்கிறது. ஆனால் காய்கறிகளை அதிக அளவில் கொதிக்கும் தண்ணீரில் சமைக்கும்போது வைட்டமின் 'C' சத்து அதிக அளவில் காய்கறிகளைவிட்டு வெளியேறுகிறது. அதை உண்ணும்போது குறைவான அளவு வைட்டமின் 'C' சத்துதான் நமக்கு கிடைக்கிறது.

**சரி! முழு சத்துக்களையும் பெற காய்கறிகளை சமைக்காமலே சாப்பிட்டுவிடலாமா?**

சாப்பிடலாம்தான்! கேரட், வெள்ளரிக்காய், தக்காளி, வெங்காயம் போன்றவைகளை சாப்பிட்டுவிடலாம். கத்தரிக்காய், உருளைக்கிழங்கை சாப்பிட முடியாதே! அவைகளை வேக வைத்துதானே சாப்பிட்டாகவேண்டும்.

மீன் துண்டுகளை குழம்பாக வைத்து சாப்பிடும்போது, அதிலிருக்கும் ஒமேகா3 கொழுப்பு அமிலம் நமக்கு முழுமையாக கிடைக்கும். மீன் துண்டை வறுத்தாலோ, மைக்ரோ ஓவனில் வைத்து சூடு பண்ணினாலோ, அந்த மீனிலுள்ள ஒமேகா3 கொழுப்பு அமிலம் முழுமையாக கிடைக்காது.



கிரில்லிங் (Grilling) என்று சொல்லக்கூடிய முறையில் சூடாக்கப்பட்டு கோழி இறைச்சி தயாரிக்கப்படுகிறது. இந்த முறையில் வெப்பம் கீழேயிருந்து மேலே வரும். சாலையோர உணவகங்களில் கிரில்லிங் செய்யப்படுவது வெளியே இருந்து பார்த்தாலே தெரியும். இது சாப்பிட ருசியாகத்தான் இருக்கும். ஆனால் கிட்டத்தட்ட 40 சதவீத வைட்டமின் சத்து, அந்த கோழி இறைச்சியிலிருந்து வழியும் கொழுப்பு சாறுடன் சேர்ந்து வெளியேறிவிடும்.

இதேபோல் ப்ராய்லிங் (Broiling) என்று சொல்லக்கூடிய முறையிலும் இறைச்சி போன்ற உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படும். இந்த முறையில் வெப்பம் மேலேயிருந்து கீழே வரும். இதிலும் 40 சதவீத சத்துக்கள் வழிந்து, வீணாகும். இந்த கிரில்லிங், ப்ராய்லிங் இரு உணவு தயாரிப்பு முறைகளிலும், 'பாலிஸைக்ளிக் அரோமேட்டிக் ஹைட்ரோ கார்பன்' (Polycyclic Aromatic Hydrocarbon) என்ற வேதிப்பொருள் சேர்க்கப்படுகிறது. இது புற்றுநோயை உருவாக்குவதாகும்.

அதிர்ஷ்டவசமாக இந்தப் பொருள், இறைச்சித் துண்டிலிருந்து வழியும் கொழுப்போடு சேர்ந்து வெளியேறி விடுகிறது. கீழே வழிந்திருக்கும் கொழுப்புக் கரைசலை வழித்தெடுத்து வெளியே போட்டு விட்டால், நமக்கு ஆபத்தில்லை. சுவைக்காக

அதை மீண்டும் எடுத்து கலந்துவிட்டால் நமக்கு ஆபத்து.

மைக்ரோவேவ் ஓவனை பயன்படுத்தி சமைப்பது ஓரளவு நல்லது. விரைவாக இதில் சமையல் முடிந்துவிடும் என்பதால், அதிக நேரமும்- அதிக வெப்பமும் அந்த உணவில் நிலைகொண்டிருக்காது. அதனால் அந்த உணவுப் பொருட்களிலுள்ள சத்துக்கள் ஓரளவு பாதுகாக்கப்படும். குறிப்பாக பூண்டு, காளான் போன்றவைகளில் இருக்கும் நோய் எதிர்ப்பு சக்தி சத்துக்கள், மைக்ரோவேவ் ஓவன் சமையல் மூலம் பாதுகாக்கப்படுகிறது.

'பேப்பர் ரோஸ்ட்' தோசை சாப்பிடுவது பலருக்கும் பிடிக்கும். 'ரோஸ்ட்டிங்' *(Roasting)* என்கிற முறையில் இது தயாரிக்கப்படுகிறது. உலர்ந்த வெப்பத்தில் *(Dry heat)* இது தயாராகிறது. 'ரோஸ்ட்டிங்' முறையில் பலவிதமான உணவுகள் தயாரிக்கப்பட்டாலும், ரோஸ்ட் என்று சொன்னாலே சைவப் பிரியர்களுக்கு தோசையும், அசைவப் பிரியர்களுக்கு 'மட்டன் ரோஸ்ட்டும்' ஞாபகத்துக்கு வரும். 'ரோஸ்ட்டிங்' முறையில் உணவு தயாரிக்கும்போது, அதிக அளவு வைட்டமின் சத்து இழப்பு ஏற்படுவதில்லை.

பேக்கிங் *(Baking)* முறையில் பன், ரொட்டி, கேக், பிஸ்கெட், மப்பின், பப்ஸ் போன்றவைகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த முறையிலும் உணவுப் பொருட்களிலிருந்து வைட்டமின் சத்துக்கள் அதிக அளவில் வெளியேறுவதில்லை.

*'Stir Frying'* என்று சொல்லக்கூடிய இந்த உணவுத் தயாரிப்பு முறையில், உணவுப் பொருட்கள் ஒரு நீண்ட கை கொண்ட கடாயில் *(Sauce Pan)* போடப்பட்டு சிறிதளவு எண்ணெய் அல்லது வெண்ணெய் ஊற்றப்பட்டு அதிக வெப்பத்தில் வறுக்கப்படும். தொடர்ந்து கிளறிக் கொண்டே இருப்பதால், சீக்கிரம் உணவுப்பொருள் வெந்துவிடும். அதிக நேரம் வெப்பத் தாக்குதலுக்கு உட்படாததாலும், தண்ணீர் சேர்க்கப்படாததாலும் சத்துக்கள் வெளியேறுவதில்லை. கொழுப்பில் கரையக்கூடிய வைட்டமின்கள் வறுக்கும்போது வெளியேறுவதில்லை. வீணாகுவதும் இல்லை.

*'Deep Frying'* என்பது அதிக வெப்பத்தில், அதிக எண்ணெய் உபயோகித்து செய்யப்படுவது. இந்த முறையில் உணவு தயாரிக்கும்போது கொஞ்சம் அசந்தாலும் உணவு கரியாகிவிடும். அந்த அளவுக்கு எண்ணெய் கொதித்திருக்கும். அதிக உஷ்ணமும் இருந்து கொண்டிருக்கும்.

இந்த முறையில் தயாரிக்கப்படும் உணவு நன்றாக வெந்துவிடும். இதில் கொழுப்பும் உருகி உணவோடு சேர்ந்து விடுவதால், சுவை அதிகமாக இருக்கும். பொரிக்கும்போது அதிக அளவில் எண்ணெய்க்கு வெப்பம் ஏறுவதால், அல்டிஹைடு *(Aldehyde)* என்று சொல்லக்கூடிய விஷப்பொருள் ஒன்று உருவாகிறது. இது புற்றுநோயை உண்டாக்கும் சக்தி உடையது. எனவே பொரிக்கும் உணவை சாப்பிடும்போது எச்சரிக்கை உணர்வு மிக அவசியம்.

ஸ்டீமிங் *(Steaming)* அதாவது ஆவியில் வேகவைப்பது, இதுதான் மிகச்சிறந்த உணவு தயாரிப்பு முறை. இந்த முறையில் உணவு தயாரிக்கும்போது சத்துப் பொருட்கள் எதுவும் வீணாவதில்லை. வெளியேறுவதில்லை.


SENGUNTHAR ENGINEERING COLLEGE
(AUTONOMOUS)
Estd. 2001
ISO 9001 REGISTERED
Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai
Accredited by NAAC with "A" Grade & Recognized Under Section 2(f) and 12(B) of UGC Act, 1956
TIRUCHENGODE (Po.), NAMAKKAL - 637 205,
TAMIL NADU, INDIA.
B.E.
CIVIL | CSE* ECE* | EEE* MECH*
MBA
Ph.D
CSE | ECE
TNEA
2617
M.E.
Structural Engg.
CSE |
VLSI DESIGN
SENGUNTHAR COLLEGE OF ENGINEERING
Estd. 2007
GABCB
(Approved by AICTE, New Delhi & Affiliated to Anna University, Chennai)
An ISO 2001 : 2015 Certified Institution
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)
B.E.
MEDICAL ELECTRONICS ENGG.*
ROBOTICS & AUTOMATION
B.Tech.
INFORMATION TECHNOLOGY
TNEA
2629
M.E.
COMM & NETWORKING
MEDICAL ELECTRONICS
SENGHUNDHAR COLLEGE OF PHARMACY
Estd. 2017
GABCB
Approved by AICTE, New Delhi & Pharmacy Council of India (PCI)
Affiliated to The Tamil Nadu Dr.M.G.R. Medical University, Chennai
TIRUCHENGODE - 637 205, NAMAKKAL (Dt)
D.PHARM. | B.PHARM.
Lateral Entry
For Admission Contact
Phone : 04288 - 254716, 255716, 253716, 255727
Cell : 93674 74849, 93600 53352
Log on : www.scteng.co.in | www.scew.org | www.scpt.co.in




## வேலூர் மாவட்ட வாரியார் கல்வி /மருத்துவ அறக்கட்டளையின் சார்பில்

# 13–ஆவது ஆண்டு ஊக்கப்பரிசு வழங்கும் விழா

வேலூர் மாவட்ட வாரியார் கல்வி /மருத்துவ அறக்கட்டளையின் சார்பில் 13-ஆவது ஆண்டு ஊக்கப்பரிசு வழங்கும் விழா குடியாத்தம் ஆர். எஸ்.ரோடு, கே.எம்.ஜி. கல்வி மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்ள கே.எம். ஜி.கலை அரங்கில் 31-01-2021 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது.

அறக்கட்டளையின் நிறுவனத் தலைவரும், கொடை வள்ளலுமான கே.எம்.ஜி.ராஜேந்திரன், தலைமை தாங்கினார். கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்களின் தலைவரும், அறக்கட்டளையின் கொடை வள்ளலுமான கே.எம்.ஜி.சுந்தரவதனம் முன்னிலை வகித்தார்.

அறக்கட்டளையின் செயலாளரும், கொடை வள்ளலுமான ஆசிரியர் எம். தண்டபாணி வரவேற்புரை நிகழ்த்தினார். விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்ட தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் கைத்தறிக் கதிரவன், K.P.K. செல்வராஜ் 2019-2020ஆம் ஆண்டு அரசு பொதுத்தேர்வில் +2 வகுப்பில் சாதனைப் படைத்த மாணவர்களுக்கு ரொக்கப்பரிசுகளும், பாராட்டு சான்றுகளும், பாராட்டு கேடயங்களையும் வழங்கி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கியும் சிறப்புரை ஆற்றினார். மாநிலத்தலைவரோடு தலைமைச்சங்க பொதுச்செயலாளர் R.P.குமரகுமரன், பொருளாளர் R.காந்தி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற பிற இனத்து மாணவி ஈ. தேஜஸ்வினியை பாராட்டி கௌரவித்து சிறப்பு பரிசாக ரூ.3500ம் பாராட்டு சான்றும் கேடயமும், வழங்கப்பட்டது. மேலும் குடியாத்தம் தாலுக்கா, வேலூர் தாலுக்கா, காட்பாடி தாலுக்கா, ஆம்பூர் தாலுக்காவைச் சார்ந்த நமது சமுதாய மாணவர்களில் தாலுக்கா அளவில் முதலாவது மதிப்பெண் பெற்ற நான்கு மாணவர்களுக்கு தலா ரூ.3000மும், இரண்டாவது மதிப்பெண் பெற்ற நான்கு மாணவர்களுக்கு தலா ரூ2000மும் மூன்றாம் மதிப்பெண் பெற்ற நான்கு மாணவர்களுக்கு தலா ரூ.1500ம் ரொக்கப்பரிசாக வழங்கியதோடு,

பாராட்டுச் சான்றுகளும், பாராட்டு கேடயங்களும் வழங்கப்பட்டது.

பத்தாம் வகுப்பு, +1 வகுப்பு மாணவர்கள் அரசு பொதுத்தேர்வு எழுதாததால் அம்மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவில்லை.

மேலும் தொழிற்கல்வி பயிலும் மாணவர்கள் 15 பேருக்கு, ரூ.7500யை திருமதி. எம்.பாலம்மாள் கல்வி அறக்கட்டளையின் சார்பில் வழங்கப்பட்டது.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க துணைத்தலைவரும், வேலூர் மாவட்டத் தலைவருமான சி.என். தட்சிணாமூர்த்தி, திருப்பத்தூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் கே.சம்பத்குமார், வேலூர் மாவட்ட செங்குந்த மகாஜன சங்க செயலாளர் எம்.ரவி, பொருளாளர் எம். மார்கபந்து, தலைமைச்சங்க செயற்குழு உறுப்பினர்களான நல்லாசிரியர் எல். டி.மோகன், எம்.சுதாகர், ஆசிரியர் இ.லோகநாதன் எஸ். மோகனராமன், ஆம்பூர் ஜி.ரவி, மற்றும் பெரியாங்குப்பம் என்.மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சரஸ்வதி வித்யாலயா பள்ளிகளின் தாளாளரும், அறக்கட்டளை வள்ளலுமான ஹீராலால்சந்த் சேத்தி விழாவில் கலந்து கொண்டு அறக்கட்டளையின் நிர்வாகிகளுக்கும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க நிர்வாகிகளுக்கும், சால்வை அணிவித்து கௌரவித்தார். மேலும் குடியாத்தம் நகர செங்குந்தர் சங்க நிர்வாகிகளும், கிராம கிளை நிர்வாகிகளும் விழாவில் கலந்துக் கொண்டு மாநில நிர்வாகிகளுக்கும், அறக்கட்டளை நிர்வாகிகளுக்கும், அறக்கட்டளையின் வள்ளல் ஹீராலால்சந்த் சேத்தி அவர்களுக்கும் சால்வை அணிவித்து சிறப்பு செய்தனர்.

விழா ஆரம்பிக்கும் முன்பே மாணவர்களுக்கும், மாணவர்களின் பெற்றோர்களுக்கும் விழாவில் கலந்துக் கொண்ட பிரமுகர்களுக்கும், சிற்றுண்டியும், தேனீரும் வழங்கப் பட்டது.

விழா ஏற்பாடுகளை கல்லூரியின் பேராசிரியர்களும், அறக்கட்டளையின் கொடைவள்ளல் எஸ்.ஆர்.சண்முக சுந்தரம், புரவலர் எம். தேவராஜ் ஆகியோர் செய்துவித்தனர். விழா சுமார் 8.00 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

தமிழுண்டு, தமிழ் மக்க ளுண்டு – இன்பத்
தமிழுக்கு நாளும்செய் வோம்நல்ல தொண்டு
தமிழ்என்று தோள்தட்டி ஆடு – நல்ல
தமிழ்வெல்க வெல்கஎன் றேதினம்பாடு



சிறுவர் கதை



# அதி புத்திசாலிகள்

முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்தில் வாழும் மக்கள், இந்த உலகத்திலேயே தாங்கள் தான் பெரிய அறிவாளிகள் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அவர்கள் அனைவரும் சரியான முட்டாள்கள் என்பது அவர்களுக்கு தெரியாது.

ஒருமுறை அவர்கள் மரத்தாலான பெரிய வீடு ஒன்றைக் கட்டத் தீர்மானித்தனர். அதற்கான நல்ல மரத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் காட்டுக்குப் போக முடிவு செய்தனர். அப்போது, அவர்களில் மிகவும் அதிபுத்திசாலியான ஒருவன்,

"நான் குதிரை வண்டியில் ஏறி முதலில் போகிறேன். நீங்களெல்லாம் பின்னால் வாருங்கள்!" என்றான்.

எல்லாரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதிபுத்திசாலி குதிரை வண்டியில் ஏறி காட்டுக்குப் பாய்ந்து சென்றான். ஆனால், வழியில் அவன் குதிரைவண்டி ஒரு கல்லின் மீது ஏறியதால் கவிழ்ந்தது. அவன் கையிலிருந்த கோடாரி தூரத்தில் சென்று விழுந்தது. அவனும் ஆழமான ஒரு குழியில் விழுந்து விட்டான்.

குதிரை வண்டிக்குப் பின்னால் வந்த மற்ற அறிவாளிகள், அதிபுத்திசாலியின் கோடாரி வழியில் கிடப்பதைப் பார்த்தனர். அவர்களில் மிகச் சிறந்த அறிவாளி அவன்தான் என்பதால், அவன் கோடாரியை விட்டுச் சென்றதற்கு ஏதும் முக்கியமான காரணம் இருக்கும் என்று மற்றவர்கள் நினைத்தனர். அதனால், எல்லாரும் மரம் வெட்டுவதற்காகத் தங்கள் கையில் எடுத்து வந்திருந்த கோடாரியை அப்படியே போட்டுவிட்டுத் தொடர்ந்து சென்றனர்.

காட்டுக்குச் சென்று வெட்டுவதற்கு ஏற்ற மரத்தைத் தேர்ந்தெடுத்தனர். ஆனால், யார் கையிலும் கோடாரி இல்லையே, பிறகு எப்படி மரம் வெட்டுவது? எல்லாரும் ஒன்றாக அமர்ந்து இதற்கு என்ன வழியென்று சிந்தித்தனர்.

அங்கிருந்தவர்களில் முக்கியமான அறிவாளி சொன்னான்.

"நான் ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறேன். மரத்தை வெட்ட முடியவில்லை என்றாலும் நாம் மரத்தின் கிளையை ஒடிப்போம். இப்போது இருப்பதில் நான்தானே பெரிய அறிவாளி. அதனால் நான் முதலில் மரத்தில் ஏறி உறுதியான ஒரு கிளையைப் பிடித்துத் தொங்குகிறேன். அப்போது உங்களில் ஒருவர் என் காலைப் பிடித்துத் தொங்க வேண்டும். அவருடைய காலைப் பிடித்து மற்றொருவர் தொங்க வேண்டும். அப்படி நீண்ட சங்கிலி போல ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கும் போது நம் பாரம் தாளாமல் கிளை ஒடிந்து கீழே விழும்!" என்றான்.




அது மிகவும் நல்ல கருத்துதான் என்று எல்லாரும் ஏற்றுக் கொண்டனர். அவ்வாறு அந்த அறிவாளி பக்கத்திலிருந்த மரத்தில் ஏறி ஒரு உறுதியான கிளையைப் பிடித்து தொங்கினான். அவன் காலை மற்றொருவன் பிடித்துத் தொங்கினான். அவன் காலை இன்னொருவன் பிடித்துத் தொங்கினான். இப்படியே எல்லாரும் ஒருவர் காலை ஒருவர் பிடித்துத் தொங்கினர். மிகப் பெரிய பாரத்தால் கிளை, எப்போது வேண்டுமானாலும் முறிந்து விடக்கூடிய நிலைக்கு வந்தது. அப்போது அறிவாளி சொன்னான்.

"நண்பர்களே, கிளை இப்போது ஒடிந்து விடும். அதற்கு முன்பு நான் இந்தக் கிளையை இன்னும் கொஞ்சம் பலமாகப் பற்றிக் கொள்கிறேன்!" என்றான்.

கிளையை மேலும் வலுவாகப் பற்றிக் கொள்வதற்காக அவன் கையைச் சற்று அசைத்ததும் அவன் பிடி நழுவியது. எல்லாரும் கீழே விழுந்தனர். ஆனால், அந்த மரக்கிளையோ, முறியாமல் அப்படியே இருந்தது. இனி என்ன செய்வது என்று எல்லாரும் ஆலோசித்தனர். அந்தக் கூட்டத்திலிருந்த வேறொரு அறிவாளி இப்படிச் சொன்னான்.

"நண்பர்களே, நாம் இந்த மரத்தின் கீழே தீ மூட்டுவோம். அந்த வெப்பத்தில் கிளை ஒடிந்து கீழே விழுந்துவிடும்!" என்றான்.

எல்லாரும் அது ஒரு சிறந்த கருத்துத்தான் என்று ஏற்றுக் கொண்டனர். அந்த அறிவாளி அவனிடம் இருந்த ஒரே ஒரு தீப்பெட்டியை வெளியே எடுத்தான். ஆனால், அவனுக்கு ஒரு சந்தேகம். தீக்குச்சி எரியவில்லை என்றால் என்ன செய்வது? அவன் ஒரு தீக்குச்சியை உரசி பற்றவைத்துப் பார்த்தான். அது எரிந்தது. ஆயினும் அடுத்த குச்சி எரியவில்லையென்றால் என்ன செய்வது? அவனுக்கு மீண்டும் சந்தேகம் வந்தது. அடுத்த தீக்குச்சியையும் அவன் பற்றவைத்துப் பார்த்தான். அப்படி தீப்பெட்டியில் இருந்த எல்லா தீக்குச்சியும் தீரும்வரை அவன் உரசி உரசிப் பார்த்தான். கடைசியில் அவன் திருப்தியுடன் சொன்னான்.

"தீக்குச்சிகளெல்லாம் தீர்ந்துவிட்டன. ஆயினும் என்ன? எல்லா தீக்குச்சிகளும் நன்றாக எரியக்கூடியவைதான் என்று நமக்குத் தெளிவானது அல்லவா?" என்றான்.

முன்பு மரத்திலிருந்து விழுந்த அறிவாளி, மற்றொரு கருத்தைச் சொன்னான்.

"நண்பர்களே, நான் முன்பு மரத்திலிருந்து கீழே விழுந்தபோது என் தலை கிளையில் மோதியது. அப்போது நான் நிறைய நட்சத்திரங்களையும், தீப்பொறிகளையும் பார்த்தேன். அது போன்ற தீப்பொறிகளை வைத்து நாம் இந்த மரத்தை எரிய வைக்கலாம். அதற்கு என்ன செய்யவேண்டும்? நீங்கள் என் தலையில் மாறி மாறி அடிக்க வேண்டும். அப்போது நான் பார்க்கும் தீப்பொறிகளை நீங்கள் உடனே பிடித்துச் சேகரிக்க வேண்டும்!" என்றான்.

நண்பர்கள் அதை ஏற்றுக்கொண்டனர். பிறகு அந்த அறிவாளியை மாறி, மாறி அடித்தனர். அடி வாங்கும்போது அவன் நிறைய நட்சத்திரங்களையும், தீப்பொறிகளையும் பார்த்தான். ஆனால், அதையெல்லாம் பிடித்து நண்பர்களிடம் கொடுப்பதற்கு அவனால் முடியவில்லை.

அவர்கள் மீண்டும் கூடி அமர்ந்து சிந்தித்தனர். அவர்களில் ஒருவன் அப்போது நல்லபடியாகச் சிந்தித்தான். அவன் சொன்னான்.

"நண்பர்களே, நாம் திரும்பிச் சென்று, வழியில் போட்டுவிட்டு வந்த கோடாரிகளை மீண்டும் எடுத்து வரலாம். அதைத் தவிர நமக்கு வேறு வழியில்லை!" என்றான்.

அவ்வாறு அவர்கள் சென்று தங்கள் கோடாரிகளுடன் திரும்பி வந்தனர். தேவையான மரத்தை வெட்டி எடுத்துக்கொண்டு கிராமத்துக்குச் சென்றனர்.

தங்களது புத்திசாலித்தனத்தை நினைத்து தங்களைத் தாங்களே மிகவும் மெச்சிக் கொண்டனர்.



## மழலைகளுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்



ஏப்ரல் 10

**P.ஆராதனா**

பெற்றோர் :

P.பிரபு - M.இந்துமதி

சலங்கபாளையம், கவுந்தப்பாடி.

மார்ச் 24

**R.சஞ்சய்**

பெற்றோர் :

M.G.இரவீந்தர் - R.சக்தி சரண்யா,

அயனாவரம், சென்னை.






ஏப்ரல் 27

**P.குழலினியன்**

பெற்றோர் :

K.புகழேந்தி - P.சங்கீதா

சின்னசேலம்.

# தெரிந்து கொள்வோமா?

நம் நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களுக்கும் சமமான, தரமான கல்வியை வழங்க தேசிய கல்விக் கொள்கை – 2020 (NEP) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி,

1. பன்முகத்தன்மை கூடிய பல்கலைக் கழகங்கள் உருவாகும்.
2. ஒரே நேரத்தில் பல பட்டங்களை பெறலாம்.
3. தங்களின் திறனை வளர்ந்துக் கொள்ள, ஆரம்பக் கல்வியையும், உயர்கல்வியையும் தாய்மொழியிலும் கற்கலாம்.
4. தற்போதுள்ள 10, +2 பள்ளி கல்வி முறை நீடிக்காது.
5. 5+3+3+4 என்ற புதிய கல்வி வழிமுறை பின்பற்றப்படும்.

   பள்ளி கல்வி முன்பருவம் – LKG முதல் 2ம் வகுப்பு வரை

   தொடக்கக் கல்வி – 3 முதல் 5ம் வகுப்பு வரை

   நடுநிலைக் கல்வி 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை

   மேல்நிலைக்கல்வி 9ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை.
6. பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு இனி கட்டாய பாடம் படித்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.
7. பொறியியல் சேர்க்கை பெறும் போது கணிதம் (Maths), இயற்பியல் (Physics) படித்திருக்க வேண்டிய அவசியமில்லை.
8. தமிழகத்தில் உயர்கல்வி பயில தற்போது நுழைவுத் தேர்வு ஏதும் இல்லை.
9. கணிதம், இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களின் மதிப்பெண் களை வைத்தே உயர்கல்வி சேர்க்கை நடைபெறுகிறது.
10. உயர்கல்வி சேர்க்கைக்கு விரைவில் திறனாய்வு தேர்வு நடத்தப்படும். இதில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் பொறியியல், கலை அறிவியல் படிப்புகளுக்கு சேர்க்கை நடத்தப்படும்.
11. மருத்துவம், சட்டம், பொறியியல், கலை, அறிவியல் என அனைத்து தரப்பு படிப்புகளுக்கும் உள்ள தனித்தனி அமைப்புகள் ஒருங்கிணைக்கப் பட்டு, தேசிய உயர்கல்வி ஆணையம் அமைய உள்ளது.
12. ஆரம்பக்கல்வி முதல் உயர்கல்வி வரை தாய்மொழியில் பயில வேண்டும் என்ற திட்டப்படி, இனி பொறியியல், தொழில் நுட்பம் சார்ந்த கல்வியை தாய்மொழியில் (தமிழ் மொழியில்) பயிற்றுவிக்க வகை செய்யப்படும்.

தொகுப்பு: **R.P.குமரகுருபரன்,**
பொதுச்செயலாளர், தெ.செ.ம.சங்கம்.




# தஞ்சை மாவட்ட செ.ம.சங்க முப்பெரும் விழா மற்றும் மாவட்ட பொதுக்குழு

தஞ்சை மாவட்ட செங்குந்தர் கல்விச் சங்கம், தஞ்சை பெருநகர கிளைச் சங்கம் இணைந்து நடத்திய 13 ஆம் ஆண்டு கல்வி ஊக்கப் பரிசளிப்பு விழா, புதிய கிளைகள் (முத்துப்பிள்ளை மண்டபம், அண்ணலக்கிரஹாரம்) தொடக்கவிழா, தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்க புதிய நிர்வாகிகளுக்கு பாராட்டு விழா ஆகிய முப்பெரும்விழா மற்றும் மாவட்ட பொதுக்குழு 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை தஞ்சாவூர் கிழக்கு காவல் நிலைய சாலையில் உள்ள திருவோண மகாலில் மாவட்டத் தலைவர் வள்ளல் லயன் S.சிவா தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் மாவட்டத் தலைவர் வள்ளல் R.திருநாவுக்கரசு குலக்கொடியை ஏற்றி வைத்தார். தஞ்சை மாநகரச் செயலாளர் சிவ. அமிர்தலிங்கம் இறைவணக்கம் பாடினார். மாவட்டச் செயலாளர் மாரியம்மன் கோவில் M.சண்முகம் செங்குந்தர் உறுதிமொழியை வாசித்தார். தலைமைச்சங்க செயற்குழு உறுப்பினர் G.M.தாஸ் வரவேற்புரையாற்றினார். மாவட்ட துணைத்தலைவர்கள் T.திருநாவுக்கரசு, G.தங்கவேல், மாவட்ட செயலாளர்கள் T.ரெங்கசாமி, ப.கோ. பழனிவேல்ராஜன் மற்றும் மாவட்ட அமைப்புச் செயலாளர் T.மனோகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணைப் பொதுச் செயலாளர் S.சோலைமுத்து ஆண்டு அறிக்கையை வாசித்து ஒப்புதல் பெற்றார். மாவட்டப் பொருளார் மு.சந்திரசேகரன் 01.01.2019 முதல் 31.12.2019 முடியவுள்ள வரவு - செலவு கணக்குகளை தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

புதிய அறக்கட்டளையாளர்களை தலைமைச் சங்க செயற்குழு உறுப்பினர்



V.M . பாஸ்கரன் அறிமுகம் செய்து வைத்தார். 10, 12ஆம் வகுப்புகளில் 80% மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களை மாவட்டச் செயலாளர் V.சுவாமிநாதன் அறிமுகம் செய்து வைத்தார். புதிய மாநில நிர்வாகிகளையும், பரிசுபெறும் மாணவர்களையும் கௌரவத்தலைவர் தொழிலதிபர் E.P.சேதுராமன், மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் திருமதி. சொர்ணம்பாள் அருணாச்சலம், தஞ்சை பேராசிரியர் A.இராமகிருஷ்ணன், கரந்தை தினமலர் பத்திரிக்கை நிருபர் திருமதி. கமலா, மதுரை திருமதி. அன்னக்கொடி காந்தி, திருவாரூர் மாவட்டத் தலைவர் C.கணபதி, காரைக்கால் மாவட்டத் தலைவர் பொன். தட்சணாமூர்த்தி, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட துணைத் தலைவர் செம்பனார் கோவில் PKCC கணேசன் ஆகியோர் பாராட்டிப் பேசி வாழ்த்துரை வழங்கினார்கள்.

பரிசுபெறும் மாணவர்களை தெ.செ.ம.சங்கத்தின் பொதுச்செயலாளர் R.P.குமரகுருபரன், பொருளாளர் R.காந்தி, துணைப் பொதுச் செயலாளர் K.சுந்தரமூர்த்தி, துணைத் தலைவர் மெட்டல் M.மணி, செயலாளர் து.ப.புனிதம் ஆகியோர் பரிசுகள் வழங்கி வாழ்த்துரை வழங்கினார்கள்.

10ஆம் வகுப்பு மாணவி தஞ்சாவூர் செல்வி வே. கீர்த்தனா, 12ஆம் வகுப்பு மாணவர் அம்மாப்பேட்டை செல்வன் K. கிஷோர்ராம் ஆகியோர் ஏற்புரை ஆற்றினர்.



தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத் தலைவர் இளைஞர்களின் எழுச்சி நாயகன், கைத்தறிக் கதிரவன் K.P.K. செல்வராஜ், தஞ்சை பேராசிரியர் முனைவர் சோ.ந. கந்தசாமி எழுதிய கல்வெட்டுக்களில் கைக்கோளப் பெரும்படை என்ற நூலை வெளியிட்டும், இளம் தம்பதியர் திரைப்பட நடிகர் S.ஜெய்கணேஷ் என்கிற சத்யா, திருமதி. S.மகாலெட்சுமி ஆகியோரை அறிமுகம் செய்வித்தும் பரிசுபெறும் மாணவ - மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கியும் விழாப்பேருரை ஆற்றினார்கள்.

விழா நிகழ்ச்சிகளை மாவட்ட பொதுச்செயலாளர் நல்லாசிரியர் சோ.காசிநாதன் தொகுத்து வழங்கினார், அம்மாப்பேட்டை செயலாளர் R.வடிவேல் நன்றி கூறியபின் விழா இனிதே நிறைவுற்றது.

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிறந்தநாளை அரசு விழாவாகவும், தைப்பூச விழாவை அரசு விடுமுறையாகவும் அறிவித்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிப்பது என ஒருமனதாக தீர்மானிக்கப்பட்டது. அண்மையில் மறைந்த தஞ்சை மாவட்ட செங்குந்த சொந்தங்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

# தமிழுக்கும் அமுதென்று பேர்

## அறிவோம் எளிய தமிழ் இலக்கணம்

ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன.

ஒரு – ஓர் இரண்டு வார்த்தைகளுக்கும் பொருள் ஒன்றே. இருப்பினும் உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

உயிர்மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் அல்லது ஒரு இரண்டையும் பயன்படுத்தலாம்.

(எ–கா) ஓர் அலை, ஓர் ஊர், ஓர் ஏரி,
ஒரு நகரம் ஒரு கடல்

இது ஆங்கிலத்தில் "a", "an" என்ற பயன்பாட்டுக்கு இணையானது. ஒரு வருமொழிக்கு முன் (சொல்லுக்கு முன்) "ஓர்" என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டுமெனில், அந்த வருமொழிச் சொல் உயிரெழுத்தால் தொடங்குதல் வேண்டும்.

உயிர் எழுத்து வந்தால் ஒரு – ஓர் என்றே மாறிவிடும். மாற வேண்டும்.

ஆனாலும், பேச்சு வழக்கில் ஒரு ஊர் என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. அது தவறு.

ஒரு – ஓர் என்று மாற வேண்டும் என்கிற விதி இருக்கிறது.

ஓர் – உயிர் எழுத்தின் முன்னும் வரும். உயிர்மெய் எழுத்தின் முன்னும் வரும்.

(எ–கா) ஓர் உடை, ஓர் நகரம், ஓர் சிலை

ஒரு – உயிர் மெய் எழுத்துக்கு முன் வரும்.

(எ–கா) ஒரு சிலை, ஒரு கிராமம்

# M.P. நாச்சிமுத்து M. ஜெகநாதன் பொறியியல் கல்லூரி

சுத்தானந்தன் கல்வி நகர்,
சென்னிமலை, ஈரோடு - 638 112.

**Phone : 04294 - 250242, 250220, 251617**

**E-mail : mpnmjec@mpnmjec.ac.in Visit us at : www.mpnmjec.ac.in**



'உத்யோக் ரத்னா'
திரு. ஜெ. சுத்தானந்தன் B.Sc.
நிறுவனர்

**Counselling Code 2713**



'பாரத் வித்யா சிரோமணி'
Dr. வசந்தா சுத்தானந்தன் M.A., B.Ed.
தாளாளர்

கல்விச் சேவையில் 35 வருடங்கள் MPNMJEC

## B.E.
- Civil Engineering
- Computer Science Engineering
- Electronics and Communication Engineering
- Electrical and Electronics Engineering
- Mechanical Engineering

## B.Tech. I.T.

## M.E.
- CAD / CAM
- Computer Science and Engineering
- Power Systems Engineering
- Structural Engineering
- VLSI - Design

## M.B.A
## M.C.A

Placement Record 394 Offers

தொடர்புக்கு : 98652 33600, 98655 33800, 98655 33700, 73736 44088



# சிறப்பான வாழ்வு தரும்
# சித்ரா பவுர்ணமி விரத வழிபாடு

வழிபாடுகளே நம் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன என்று முன்னோர்கள் கூறியுள்ளனர். வழிபாடுகளிலும் கூட நிலவு நிறைந்த நாளிலும், நிலவு மறைந்த நாளிலும் மேற்கொள்ளும் விரதங்கள் உடனடி பலன்களை வழங்கக்கூடியவை.

அப்படிப்பட்ட பலம் வாய்ந்த நாட்களில் தான் இயற்கையில் ஏராளமான மாற்றங்கள் நடைபெறும். கடல் தண்ணீர் மேல் எழும்பும். அலையடிக்கும் அந்த நாளில் விரதமிருந்தால் அலைபாயும் உள்ளங்களுக்கு அமைதி கிடைக்கும். அப்படிப்பட்ட நாட்களில் ஒன்றுதான் சித்ரா பவுர்ணமி. சித்திரை மாதத்தில் வரும் பவுர்ணமி என்பதால், 'சித்ரா பவுர்ணமி' என்று அழைக்கப்படுகிறது. இது பன்னிரண்டு மாதங்களில் வரும் பவுர்ணமியில் மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

சித்திரை மாதத்தில் சூரியன் உச்சம் பெறுகிறார். அந்த மாதத்தில் வரும் பவுர்ணமியன்று சந்திரன் முழுமையடைகிறார். ராஜ கிரகங்களாக விளங்கும் சூரியனும், சந்திரனும் பலம்பெறுவதால் அந்த மாதத்தில் வரும் பவுர்ணமிக்கு முன்னோர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து விழா எடுத்துள்ளனர். மற்ற பவுர்ணமி நாட்களை விட, சித்ரா பவுர்ணமி நாளில் கிரிவலம் வருவது சிறப்பு மிகுந்தது. அன்றைய தினம் மலை வலம் வந்து முருகனை வழிபட்டால் மகத்தான வாழ்வு மலரும்.

சித்திரத்திலிருந்து சிவனால் உயிர்ப்பிக்கப்பட்டவரும், சித்திரை மாதம், சித்திரை நட்சத்திரத்தில் பிறந்து, சித்திரைப் பௌர்ணமியில் மண நாள் கொண்ட சித்ரகுப்தனையும் வழிபட வேண்டும். இந்த வழிபாட்டால் ஆயுள் விருத்தியும், ஆதாயம் தரும் செல்வ விருத்தியும் உண்டாகும். நமது பாவ புண்ணியங்களைப் பதிவு செய்து வைக்கும், சித்ரகுப்தனுக்கு அவர் அவதரித்த நாளில் விழா எடுப்பது சிறப்புக்குரியதாகும். 'நாம் மலையளவு செய்த பாவத்தைக் கடுகளவு ஆக்குக, கடுகு அளவாகச் செய்த புண்ணியத்தை

மலையளவு ஆக்குக' என்று வணங்க வேண்டும்.

சூரியனைப் பார்த்து கிழக்கு நோக்கிப் பொங்கல் வைத்து, சித்ரகுப்தனைச் சிந்தையில் நினைத்து வழிபட வேண்டும். சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், பச்சரிசி கொழுக்கட்டை, இனிப்புப் பலகாரங்கள் போன்றவற்றை இலையில் பரப்பி வைத்து, பழங்களில் பலாச்சுளை, முழு நொங்கு, இளநீர், நீர்மோர், பானகம், திராட்சை, மாம்பழம் போன்றவற்றையும் படைக்க வேண்டும்.

அன்றைய தினம் வைக்கும் குழம்பில் கூட, தட்டைப்பயிறும், மாங்காயும் சேர்த்து வைப்பது வழக்கம். ஜவ்வரிசிப் பாயாசம் வைத்து அப்பளம் வைத்து, பூஜை அறையின் நடுவில் கோலமிட்டு, அதன் மேல் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, சங்கு ஊதி வழிபடுவது அவசியமாகும். பவுர்ணமி விரதம் இருப்பவர்கள், விரதத்தைத் தொடங்க வேண்டிய நாள் சித்ரா பவுர்ணமி தான். விரதத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பவர்கள் இரவு நிலவு பார்த்த பின் உணவு அருந்த வேண்டும்.

சித்ரகுப்தனுக்கு காஞ்சீபுரத்தில் தனிக்கோவில் உள்ளது. அருப்புக் கோட்டை அமிர்தகடேஸ்வரர் கோவிலிலும், திருப்பூர் மாவட்டம் சின்னாண்டிபாளையதிலுள்ள விநாயகர் கோவிலில் தனிச் சன்னிதி இருக்கிறது. இந்த ஆலயங்களுக்குச் சென்றும் சித்ரகுப்தனை வழிபட்டு சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

மதுரையில் சித்ரா பவுர்ணமி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடு வார்கள். சொக்கநாதப் பெருமான்-மீனாட்சி அம்மன் திருக்கல்யாணம் செய்து கொள்ளும் வைபவத்தைக் காண, கள்ளழகர் மதுரைக்கு எழுந்தருள்வார்.

தேவேந்திரன் சொக்கநாதப் பெருமானை வழிபட்டு, பாவத்திற்கு பரிகாரம் தேடிக் கொண்டது சித்ரா பவுர்ணமியில் தான் என்று புராணங்கள் சொல்கின்றன. இந்திரனுக்கு இனிய வாழ்வு தந்த இந்தத் திருநாளில்




நீங்களும் விரதமிருந்து சித்ரகுப்தனை வழிபட்டு உங்கள் வாழ்க்கையும் உன்னதமான வாழ்க்கையாக அமைத்துக் கொள்ளுங்கள்.

சித்ரா பவுர்ணமியன்று சித்ரகுப்தனை, அவரது துதிபாடல்களைப் பாடி வழிபாடு செய்யுங்கள். பவுர்ணமி தினத்தில் நேர்மறைச் சிந்தனையோடு செயல்படுவது நல்லது. நினைத்ததை நிறைவேற்றும் நாள் இது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.



# நாமக்கல் மாவட்டம் சூரியம்பாளையத்தில் கும்பாபிஷேகப் பெருவிழா

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சூரியம்பாளையம் செங்குந்த சமூகத்திற்கு உட்பட்ட அருள்மிகு சக்தி விநாயகர், அருள்மிகு மகாசக்தி மாரியம்மன், அருள்மிகு முத்துக்குமாரசாமி, அருள்மிகு வள்ளி தேவசேனா கல்யாண சமேத சுப்பிரமணியர் சுவாமி மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக பெருவிழா 24.02.2021 புதன்கிழமை அன்று சிவாகம முறைப்படியும் அதனைத் தொடர்ந்து அன்னதானம் சிறப்பாகவும் நடைபெற்றது.

ஊர் பொதுமக்கள் அனைவரின் அன்பு விருப்பத்திற்கு இணங்கி சிறப்பு அழைப்பாளராக தெ.செ.ம.சங்கத்தின் தலைவர் கைத்தறிக் கதிரவன் K.P.K. செல்வராஜ் கலந்து கொண்டார்.

தலைவர் அவர்களுக்கு ஊர் நாட்டண்மை காரியக்காரர்களும், விழா கமிட்டியார்கள், ஊர் பொதுமக்களும் பெருமகிழ்வோடு மேள தாளங்களுடன் வரவேற்பு அளிக்கப்பட்டு மாலை மரியாதை செய்யப்பட்டு, அர்ச்சகர் ஆகம சிரோன்மணி கார்த்திகேய குருக்கள் அவர்களால் பரிவட்டம் கட்டப்பட்டு முதல் மரியாதை செய்யப்பட்டது.

யாக சாலை, யாக பூஜை நிறைவேற மக்கள் புடைசூழ தீர்த்தக் கலசங்களுடன் கோவிலின் மேலுள்ள கும்பாபிஷேகம் நடைபெறவுள்ள கோபுரத்தின் மேல் சென்று கோபுரத்தில் அமர்ந்து தெ.செ.ம. சங்கத் தலைவர் K.P.K.செல்வராஜ் அவர்கள் முன் சரியாக 11.45 மணியளவில் கோபுர கலசங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது. மாலை மலர்கள் தூவி கற்புர ஆராதனை பூஜை

வழிபாடு செய்யப்பட்டது. கோபுர தரிசனத்தை நம் செங்குந்தர் சொந்தங்கள் மனம் மகிழ்ந்து வழிபாடு செய்து வழிபட்டனர். அப்பொழுது நம் செங்குந்தர் சொந்தங்கள் மக்கள் பெரும் திரளாக அலை கடலென ஆரவரித்து ஆரவாரம் செய்தனர். அச்சமயம் கருட பகவான் வருகை புரிந்து சுமார் 20 நிமிடம் வரை கோவிலை சுற்றிச் சுற்றி வானத்தில் வட்டமிட்டு வலம்புரிந்தது.



அதைத் தொடர்ந்து அருள்மிகு வள்ளி தெய்வானை கல்யாண சமேத சுப்பிரமணியர் அபிஷேக அலங்கார தூப தீப ஆராதனை பூஜை நடைபெற்றது. அதை முன்னமர்ந்து நம் தலைவர் அவர்களும், துணைத் தலைவர் அவர்களும், மாவட்டப் பொருளாளர் அவர்களும், ஊர் பொதுமக்களும் தரிசனம் செய்து பக்தி பரவசத்துடன் மகிழ்ந்து வழிபட்டனர்.

அதன் பிறகு தலைவர் K.P.K. செல்வராஜ் அவர்கள் கோவிலின் அருகில் ஏற்கனவே உள்ள நம் செங்குந்தர் குலக் கொடியை கொடிக்கம்பத்தில் ஏற்றி வைத்து தமது வாழ்த்துரையில் செங்குந்தர் இனத்தின் தொன்மையையும், பெருமைகளையும், சூரியம்பாளையத்தை சார்ந்த சிறுவர் முதல் பெரியவர் வரை சுமார் 3000 ஆண்கள் ஒரே வர்ணமுடைய பச்சை நிறத்தில் மேல் சட்டை அணிந்து, ஊரின் ஒற்றுமையை நிலைப்படுத்தி உள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

இப்பெரும் கும்பாபிஷேக விழாவிற்கு மாநில துணைத் தலைவரும் நாமக்கல் மாவட்டத்



தலைவரும் திருச்செங்கோடு செங்குந்தர் கல்லூரி தாளாளருமான பேராசிரியர் A.பாலதண்டபாணி, நாமக்கல் மாவட்ட பொருளாளர் S.சுந்தர் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தலைவர் உள்ளிட்ட செங்குந்த சொந்தங்கள் கும்பாபிஷேக விழாவிற்கு வருகைபுரிந்து சிறப்பித்துக் கொடுத்தமைக்கு ஊர் நாட்டாண்மை காரியக்காரர்களும், விழா குழுவினரும், செங்குந்தர் மகாஜன சங்கத்தினரும், ஊர் பொதுமக்களும், உள்ளன்போடு பாராட்டுக்களையும், நன்றியையும் மகிழ்வோடு தெரிவித்துக் கொண்டார்கள்.

சூரியம்பாளையம் நாட்டாண்மை காரியக்காரர்கள், விழா குழுவினர், செங்குந்தர் மகாஜன சங்கத்தினர்கள் விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

---




## பிரிவு உபச்சார விழா

வள்ளல் சபாபதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 2020-2021ம் கல்வி ஆண்டுக்கு, 15.03.2021 அன்று பனிரெண்டாம் மாணவ மாணவருக்கு பிரிவு உபச்சார விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளியின் செயலாளர் R.P.குமரகுருபரன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பள்ளியின் முதல்வர் M.பாலசுப்ரமணியன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். பிறகு, மாண மாணவியர் தமது எதிர்காலத் திட்டம், என்ன படிக்கப்போகிறோம், என்னவாகப் போகிறோம் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டனர்.

பள்ளியின் ஆசிரியர்கள் சிறந்த முறையில் பாடங்களை நடத்தியதோடு, நல் ஒழுக்கங்களையும், நீதிக்கதைகளையும் சொல்லி ஊக்கப்படுத்தி வந்தமைக்கு, இத்தருணத்தில் மாணவர்கள் தங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டனர்.

பதினொன்றாம் வகுப்பு மாணவி G.ஜோதிஸ்வரி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். இந்த விழாவில் பள்ளியின் செயலாளர் R.P.குமரகுருபரன் கேக் வெட்டி அனைத்து மாணவர்களுக்கும் வழங்கினார். பதினொன்றாம் வகுப்பு மாணவி T.V.சாருலதா, நன்றியுரை வழங்கினார். பள்ளியின் சார்பாக மாணவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழா இனிதே முடிவுற்றது.



தெய்வத்திரு. **கே.எம்.கோவிந்தராசனார்** அவர்கள்

நிறுவனர் : கே.எம்.ஜி. கல்வி நிறுவனங்கள்
குடியேற்றம் நகராட்சி முன்னாள் சேர்மன் (1964-1969)
1993-ஆம் ஆண்டு குடியேற்றம் நகரில் 2 நாட்கள் நடைபெற்ற
அகில உலக செங்குந்தர் மகாஜன சங்கத்தின்
மாபெரும் மாநாட்டின் வரவேற்புக்குழு தலைவர்

## திருவள்ளுவர் தொடக்கப்பள்ளி
## திருவள்ளுவர் மேனிலைப் பள்ளி
## கே.எம்.ஜி. கல்வியியல் கல்லூரி
## கே.எம்.ஜி. கலை & அறிவியல் கல்லூரி

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்துடன் நிரந்தர இணைவு பெற்றது.
பல்கலைக்கழக மானியக்குழுவால் 2(f) மற்றும் 12(B) அங்கீகாரம் பெற்றது.
தேசிய தர மதிப்பீட்டுக் குழுவால் (NAAC) B+ தர மதிப்பீடு பெற்றது.

**இளநிலை (UG)**

- **B.A** - ஆங்கிலம்
- **B.B.A** - வணிக ஆள்முறையியல்
- **B.Com(General)** - வணிகவியல்
- **B.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **B.C.A** - கணினி பயன்பாட்டியல்
- **B.Sc** - கணினி அறிவியல்
- **B.Sc** - உயிர்வேதியியல்
- **B.Sc** - நுண்ணுயிரியல்
- **B.Sc** - வேதியியல்
- **B.Sc** - கணிதம்

**முதுநிலை (PG)**

- **M.A** - ஆங்கிலம்
- **M.Com(General)** - வணிகவியல்
- **M.Com(CA)** - கணினி பயன்பாட்டு வணிகவியல்
- **M.Sc** - உயிர்வேதியியல்
- **M.Sc** - தகவல் தொழில்நுட்பவியல்
- **M.Sc** - கணிதம்
- **M.Sc** - வேதியியல்
- **M.Sc** - பயன்பாட்டு நுண்ணுயிரியல்
- **M.B.A** -

**ஆய்வியல் நிறைஞர் (M.Phil)**

- **M.Phil** - வணிகவியல்
